भारत सरकार
GOVERNMENT OF INDIA
राष्ट्रीय पुस्तकालय, कलकत्ता
NATIONAL LIBRARY, CALCUTTA

वर्ग संख्या
Class No. Ta 205
पुस्तक संख्या
Book No. A4c 7552
V. 3
रा० पु०/N. L. 38.
MGIP Sant.—45 NL (Spl/69)—4-8-69—1,00,000.

Ta
205
Ax7552
v.3

SHELF LISTED

SCANNED
S

ஆசிரியர் : கலைச்செல்வி மணிமேகலை

அருள்

Arul
4835 Vol. 3 1968-69

அருட்பெருஞ்ஜோதி



தனிப்பெருங்கருணை

NATIONAL LIBRARY
No. 20289
Date 26.7.74
CALCUTTA



தமிழ் மாத முதல் நாள் வெளி வருகிறது

இந்த இதழில்


அருள்-3 அக்டோபர்

கருணை-1 15-10-68

ஐப்பசி, கீலக விலை: 30 காசு.


இப்பொழுது நடைபெறுகிறது
சென்னை சாந்தி (டீலக்ஸ் ஏர்கண்டிஷண்ட்)
கிரௌன் · புவனேசுவரி
மற்றும் தமிழகமெங்கும்
சிவாஜி கணேசன் அளிக்கும்
ஸ்ரீ விஜயலக்ஷ்மி பிக்சர்ஸ்
தில்லானா மோகனாம்பாள்
ஈஸ்ட்மென் கலர்
பாடல்கள் - கவிஞர் கண்ணதாசன் • இசை - K.V. மகாதேவன் • ஒளிப்பதிவு - பிரசாத்
கலை - கங்கா • ரிகார்டிங் - ரீரிகார்டிங் - T.S. ரங்கசாமி
ஸ்டுடியோ - சாரதா (லெஸ்ஸீஸ் ஆப மெஜஸ்டிக் ஸ்டுடியோஸ்)
ப்ராஸஸிங் பிரிண்டிங் - ஜெமினி ஸ்டுடியோஸ் கலர் லேபரட்டரி
மூலக்கதை - கலைமணி (கொத்தமங்கலம் சுப்பு)
திரைக்கதை, வசனம், டைரக்ஷன்
A.P. நாகராஜன்

அன்புடன் பழக வேண்டும்



சிலருக்கு ஏகப்பட்ட நண்பர்கள் இருக்கிறார்கள், சிலருக்கு அவ்வளவாக நண்பர்கள் இல்லை! இதற்குக் காரணம், பழகத் தெரியாததுதான்! புதியவர்களானாலும் நாம் அன்புடன், நட்புடன் பழகத் தெரிந்து கொள்ள வேண்டும். இந்தப் பழக்கத்தை நம் வீட்டில் உள்ள பிள்ளைகளுக்கும் சொல்லித்தர வேண்டும்.

உம்மென்று முகத்தை வைத்திருப்பவர்களைப் பொதுவாக யாரும் விரும்புவதில்லை. ஆகையால் எப்போதும் நாம் சந்தோஷமாகச் சிரித்துப் பழக வேண்டும். சிரித்துப் பேசுகிறவர்களையே எல்லாரும் விரும்புகிறார்கள்.

மற்றவர்கள் நம்மை விரும்ப வேண்டும் என்று நாம் நினைப்பதைப் போல் மற்றவர்களும் விரும்புகிறார்கள்! ஆகையால் மற்றவர்களை நாம் விரும்பி, அவர்களைப் பாராட்டிப் பேச வேண்டும். அவர்களிடம் உள்ள நல்ல குணங்களையும், அவர்களுக்குப் பிடித்தவைகளையும் நாம் பாராட்டிப் பேச வேண்டும்.

நாம் ஒரு சிறிய வேலையைச் செய்து முடித்தாலும் மற்றவர்கள் பாராட்டினால் நமக்கு எப்படி மகிழ்ச்சி தோன்றுகிறது! இப்படித்தான் மற்றவர்களுக்கும் இருக்கும்!

மற்றவர்கள் நமக்குச் செய்யும் சிறிய உதவிகளுக்கும் 'நன்றி' என்று ஒரு வார்த்தையாவது சொல்லி வைக்க வேண்டும்.

மற்றவர்களிடம் இரக்கம் காட்டவேண்டும். மற்றவர்கள் பிரசினைகளை அவர்கள் சொல்லும்போது அனுதாபத்துடன் கேட்க வேண்டும். உடனே உங்கள் பிரசினைகளைச் சொல்லக் கூடாது. வாய்ப்பு வரும்போது உங்கள் பிரசினைகளை அவர்களிடம் சொல்லவேண்டும்.

மற்றவர்களுக்கு உதவி செய்ய வாய்ப்பை எதிர்பார்த்துக் கொண்டிருக்க வேண்டும். மற்றவர்கள் கேட்பதற்கு முன் நாமாக அவர்களுக்கு உதவி செய்தால், நட்பு வளரும். நண்பர்கள் மிக அதிகமாவார்கள்!

கலியாண கால விற்பனை!



- ★ பட்டுச் சேலைகள்
- ★ சோளி பீஸ்கள்

நல்லி சின்னசாமி செட்டி

பனகல் பார்க்

தியாகராய நகர்—சென்னை-17

போன் : 444115 & 444111

நறுமணம் கமழுவது



அசோகா

பாக்குத்தூள்

தூக்கங் கெடுத்தான் சுகங்கொடுத்தா னென்னுளத்தே
ஏக்கந் தவிர்த்தா னிருளறுத்தான்—ஆக்கமிகத்
தந்தா னெனையீன்ற தந்தையே யென்றழைக்க
வந்தானென் னப்பன் மகிழ்ந்து. —திருவருட்பா.



அபேகானந்தாஜி அவர்கள் திரு. மகாலிங்கத்திற்குப் பொன்னுடை போர்த்துக் காந்தி விழாவிற்கு வந்திருந்த அத்தனை பேர்களையும் கௌரவித்தார்கள்.

கல்யாண மண்டபத்தில் காந்தி விழா!

கலைச்செல்வி மணிமேகலை

இந்த வருடம் நவராத்திரியின் போது நான் என்னுடைய சிநேகிதிகள் அழைத்திருந்த போதிலும் எந்தக் கொலுவிலும் கலந்து கொள்ள இயலவில்லை. காரணம், ராஜேஸ்வரி கல்யாண மண்டபத்தில் நடந்த மகத்தான காந்திய விழாதான் என்பதில் மிகையேதுமில்லை. இராமலிங்கர் பணிமன்றமும் காந்தி அமைதி நிலையமும் சேர்ந்து நடத்திய விழா சென்னை வாழ் மக்களை ஆனந்த வெள்ளத்துள் ஆழ்த்தியது. மறைந்த அண்ணலான மகாத்மா காந்தியடிகளின் வாழ்க்கை வரலாறு பசுமரத்தாணிபோல் பதியும்படி பல அறிஞர்களும் சிந்தனையாளர்களும் கவிஞர்களும் எடுத்துரைத்தார்கள். பல நூறு மைல்களுக்கப்பால் இருந்தவர்களையும் கலந்து கொள்ளச் செய்தவர் தலைவர் திரு. நா. மகாலிங்கம் அவர்கள். பணம் வைத்திருப்பவர்கட்கு மனம் இருப்பதில்லை. மனம் உள்ளவர்களுக்குப் பணம் இருப்பதில்லை. பணமும் நல்ல மனமும் அமையப் பெற்ற ஒரு சிலரில் திரு மகாலிங்கம் தலையாயவர் என்று பெருமையோடு கூறுகிறேன். பணத்தோடு பணம் உறவாடும் இந் நாட்களிலே தலைவர் திரு. நா. மகாலிங்கம் அவர்கள் துறவிகளுடனும் ஏழை



அபேதானந்தாஜி அவர்கள் திரு. கிரிதாரிபிரசாத்திற்குப் பொன்னுடை போர்த்துக் காந்தி விழாவிற்கு வந்திருந்த அத்தனை பேர்களையும் கௌரவித்தார்கள்.

மக்களுடனும் இதயம் கலந்து உறவாடுவதை நான் தினமும் காண நேரிட்டபோது எனக்கு ஏற்பட்ட மகிழ்ச்சி சொல்லும் தரமன்று.

முதல் நாள் மண்டபத்தில் அமைக்கப் பெற்ற வள்ளலார் திரு முன் பெரிய குத்து விளக்குகள் இரண்டினை ஏற்றி வைத்து தீபஆராதனை நடத்தி வழிபட்டுப் புலவர் முருகையன் தோத்திரப் பாடல்கள் பாட, திரு பக்தவத்சலம் தலைவராக அமைய, திரு நா. மகாலிங்கம் அனைவரையும் வருக வருக என வரவேற்றார். ஆசார்ய துளசி சுவாமிகள் இந்தியில் பேசியதை அன்பர் ஒருவர் தமிழில் அழகாக மொழி பெயர்த்தார். எளிமையான விரதங்களை ஜனங்கள் மேற்கொள்ள வேண்டும் என்றும் காந்தியின் அஹிம்சை வழிநடந்து சத்தியத்தைத் தெய்வமாக மதிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். பின்னர் விரிவுரை நிகழ்த்திய திரு கிரிதாரி பிரசாத் அவர்கள் மடை திறந்த வெள்ளம்போல் பேசி மக்களைத் திறந்த வாய் மூடாது திணறச் செய்தார். வந்திருந்த மக்கள் அனைவரும் திரு. மகாலிங்கத்தின் மாண்பையும் திரு. கிரிதாரி பிரசாத்தின் பேச்சையும் புகழ்ந்தவண்ணம் இரவு 10 மணிக்குக் கலைந்தனர்.

மறுநாள் திரு ம பொ. சி. தலைமையில் நடந்த கூட்டத்தில் கலந்து கொள்ளும் வாய்ப்பு எனக்கு ஏனோ கிடைக்கவில்லை!

மூன்றும் நாள் வயது முதிர்ந்த பெரியவர் தேசபக்தர் டாக்டர் எஸ். சுப்பிரமணியத்தின் தலை

மையில் சிறப்புரை நிகழ்த்திய அ. ராமசாமி, சிறப்பாகப் பேசினார். திரு. கிரிதாரி பிரசாத் காந்திஜியின் கொள்கைகளை வலியுறுத்திப் பேசினார். கண் கலங்கினார், கேட்பவர் கண்களையும் கலங்க வைத்தார். கொத்தமங்கலம் சுப்புவின் காந்தி மகான் கதையை முதன்முறையாகக் கேட்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. இரவெல்லாம் அந்தக் குரலும் இராகமும் காதிலே இனிமையாக ஒலித்துக் கொண்டேயிருந்தது. நேரம் இனிமையாய்ச் சீக்கிரம் முடிந்துவிட்டதே என்றுகூட மிக வருத்தப்பட்டேன்!

மற்றொருநாள் கவியரங்கம் நிகழ்ந்தது. கவியரங்கில் கொத்தமங்கலம் சுப்பு தலைமை வகிக்கக் கலந்து கொண்ட ஏழு பேரும் ஒருவருக்கொருவர் சிறப்புறக் கவி பாடினார்கள். தமிழழகன் அழகான தமிழில் கவிதை இருபொருள் படச் சொல்லிச் சபையோரை மெய்ம்மறக்கச் செய்தார். கவிதை மூலம் காந்திஜியைப் படம் பிடித்துக் காட்டினார்கள் அத்தனை பேரும். தலைவர் கொத்தமங்கலம்சுப்பு அவர்கள் பேஷ் சபாஷ் என்று அடிக்கடி சொல்லி அனைவரையும் உற்சாகப்படுத்தினார் .ஒவ்வொன்றிற்கும் ஒரு பொருள் பற்றிக் கவிதை புனைந்து சொன்னார்கள். சத்தியம் பற்றி திரு தமிழழகன் அவர்களும் அஹிம்சை பற்றி திரு. நெல்லை அருள் மணி அவர்களும் புலனடக்கம் பற்றி திரு. இராம மூர்த்தி அவர்களும் சமரசம்பற்றி திரு.ர. சீ. வரதராசன் அவர்களும்தன்னலமின்மைபற்றி திரு. புலமைப்பித்தன் அவர்களும் வழிபாடு பற்றி திரு. சக்திக்கனல் அவர்களும் கவிதை சொன்னார்கள். புலனடக்கம் பற்றிக் கவிதை புனைந்து வந்த இராமமூர்த்திசொன்னார்.வயதில் முதிர்ந்தோர் புலனடக்கம் பற்றிச் சொல்ல வேண்டும். கல்யாணம் ஆகி ஒரு வருடமே ஆன என்னைப் புலனடக்கம் பற்றிப் பாடச் சொன்னால் நான் எப்படிப் பாட முடியும் என்ற கருத்தில் கவிதை சொல்லி மக்கள் அனைவரையும் சிரிக்க வைத்தார். பாரதியாரின் வாரிசாகவே எல்லோரும் உணர்ச்சியோடும் வீரத்தோடும்கவிதைபாடியது மக்களை மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆழ்த்தியது. வாழையடி வாழையாகக் கவிஞர் பலர் நம்மிடையே இருக்கிறார்கள் என்ற எண்ணம்பலரை இறுமாப்படையச் செய்தது.

மறுநாள் தலைவராக க. அருணாசலம் அழகாகப் பேசினார். மகாத்மா காந்தியுடன் நெருங்கிய நண்பராக விளங்கிய சங்கர் ராவ் தேவ் வயது முதிர்ந்தவராகக் காணப் பெற்றார். இந்தப் பெரியவரைப் பார்த்தபோது காந்திஜியையே பார்ப்பதுபோல எளிமையோடு காணப்பட்டார். இவர் என்ன பேசிவிடப் போகிறார் என்று நினைத்தவர்கள் மூக்கின் மேல் விரல் வைக்கும் வண்ணம் 1-30 மணி நேரம் ஆங்கிலத்தில் அழகாக விரிவாகப் பேசினார்! மக்களுக்குச் சரளமான பல புத்திமதிகள் சொன்னார்.

ஆறும் நாள் சி. சுப்பிரமணியம் அவர்கள் தலைமை சிந்தனையைத் தூண்டும்வகையில் அமைந்ததாகச் சொன்னார்கள். அன்றும் என்னால் கலந்து கொள்ள முடியாத காரணத்தால் மனம் மிக வருந்தினேன். அக்டோபர் ஒன்றும் தேதியன்று பகல் சுமார் அறுநூறு பேருக்குக் காந்திஜியின் பேரால் அன்னதானம் செய்யப் பெற்றது. அன்று மாலை கூட்டத்தில் பேசிய சோமயாஜுலு

அவர்கள் மிக அழகாக அருமையாகப் பேசினார்கள். தாம் மாணவராக இருந்தபோது காந்தி அடிகளைச் சந்தித்த வேளையில் நடந்த சம்பவங்களைக் கோவையாகத் தெளிவாகக் கூறினார். மக்களுக்குத் தொண்டு செய்ய வேண்டும் என்றநோக்கம்தவிர எம்.எல்.ஏ. ஆகவோ, எம்.எல்.ஸி. யாகவோ ஆக வேண்டும் என்ற எண்ணம் காந்தியடிகளைச் சேர்ந்த யாருக்கும் இல்லை என்பதை அழுத்தம் திருத்தமாகக் கூறினார்!

வெள்ளைக்கார ஆட்சியின் போது மகாத்மா நடத்திய சத்தியாக்கிரகம் போராட்டம் பற்றி உணர்ச்சி வசத்துடன் தாமும் தொண்டர்களும் கசையடிவாங்க நேர்ந்ததை விவரித்தபோது என் கண்கள் பனித்தன. பாரத தேசந்தன்னை வாழ்விக்க வந்த மகாத்மா காந்தியை அற்பப் பதராம் கோட்ஸே கொன்று விட்டான். சிதறுண்டு கிடக்கும் காங்கிரஸ்காரர்களைத் திரட்டித் தன் தலைமையின் கீழ் ஒன்று சேர்த்த ஜவஹர்லால் நேரு, சாஸ்திரி போன்றோர் மறைந்து விட்டனர் ஒருவன்பின் ஒருவராக. வாய்ப்பந்தல் போட்டவர்கள் வாழ்கிறார்கள் மக்களுக்காக அல்ல, தங்களுக்காக! காந்திஜியின் கொள்கைகளை மறந்துவிட்டவர்கள் நினைவுபடுத்திக்கொள்ளும் வகையில், இந்த ஒரு வாரம் மறைந்த மகானுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் விழா நடத்திய திரு. மகாலிங்கம் வாழ்க பல்லாண்டு! இவ்விழாவில் திருமுருக கிருபானந்த வாரியாரும் கலந்து கொண்டு சிறப்பித்தார். சிரிக்க வைத்தது மட்டுமின்றிச் சிந்திக்க வைத்தார். எட்டு நாட்களும் சிறப்பாகத் தொடர் சொற்பொழிவு ஆற்றிய திரு. கிரிதாரி பிரசாத் தமது பேச்சு வன்மையால் அனைவரது உள்ளங்களிலும் அழியாத இடம் பெற்றார். எல்லோராலும் பல மொழி தெரிந்த பண்டிதர், மகான் என்றெல்லாம் போற்றப்பட்டார். இராமலிங்கா மிஷனின் செயலாளர் ஆன ஔவை நடராஜன் இறுதி நாள் அனைவருக்கும் நன்றி கூறினார். கடமையுணர்ந்து செயலாற்றிய இவர் நல்ல சொற்பொழிவும் ஆற்றினார். இப்போது ஒரு வார காலமாகக் கலந்துபேசிப்பழகியநாம் பிரிவது உறவினர்களைப் பிரிவது போல வருத்தமளிக்கிறது என்றும் கூறினார். கோவை அரசர் திரு. மகாலிங்கம் அவர்கட்கு மக்கள் சார்பில் ஒரு பொன்னாடை போர்த்தப்பட்டது. இராமலிங்கர்பணி மன்றத்தின் சார்பிலும் காந்தி அமைதி நிலையத்தின் சார்பிலும் திரு கிரிதாரி பிரசாத் அவர்களுக்கு ஒரு பொன்னாடை போர்த்தப்பட்டது. தலைவர் திரு. மகாலிங்கம்அவர்களுக்கு ஏராளமான மலர் மாலைகள் அணிவிக்கப் பெற்றன. எட்டு நாட்களும் பாடிய அருளிசைத் தென்றல் புலவர் முருகையன் அவர்களுக்கு ஒரு பட்டுச் சால்வை போர்த்தப்பட்டது. நவராத்திரி விழாவின் போது நல்லார் பலரைக் காணவும் அவர்தம் சொற்பொழிவைக் கேட்கவும் ஒரு நல்ல வாய்ப்பை ஏற்படுத்தித் தந்த கோவை அரசர் திரு. மகாலிங்கம் அவர்கட்கு மனமாற நன்றிகூறி அருட்பா அரசு திரு. கிரிதாரி பிரசாத் அவர்களுக்கு அஞ்சலி செலுத்தி நாங்கள் பிரியா விடை றோம். ○

அட்டைப் படம்

திருமதி

கோமதி

காந்தி சொன்னவை

மேவானி கோபாலன்



* கடவுள், வரையறைகளுக்கு அடங்காதவர். நாம் அவரை உணருகிறோமே ஒழிய அறிய வில்லை.

* நாம் கடவுளுக்காகவும், அவருடைய திட்டங்களுக்காகவும் பாடுபடுகிறோம். மரணம் என்பது தோற்றத்தோடு சரி. மரணமும், அழிவும் மாறுதல்களே ஒழிய வேறல்ல. ஒரு சித்திரக்காரன் இன்னும் நன்றாக வரைய வேண்டும் என்பதற்காக ஏற்கெனவே தான் வரைந்த சித்திரத்தை அழித்து விடுகிறான். கடிகாரம் செய்பவன் நல்ல ஸ்பிரிங் போடுவதற்காக மோசமான ஸ்பிரிங்கைத் தூர எறிந்து விடுகிறான்.

* பிரார்த்தனையானது காலையின் திறவுகோல்; மாலையின் தாழ்ப்பாள். பிரார்த்தனையின் போது இதயமில்லாத சொற்கள் படைத்திருப்பதைவிட, சொற்களில்லாத இதயம் படைத்திருப்பது விசேஷம்.

* பிரார்த்தனை மதத்தின் ஆத்மாவாகவும், சாரமாகவும் விளங்குகிறது என்று நான் நம்புகிறேன். அதனால் பிரார்த்தனை மனித வாழ்க்கையின் சாரமாகவே விளங்க வேண்டும். என் அனுபவத்திலிருந்து சொல்லுகிறேன், பிரார்த்தனையின் மாய சக்தியை அனுபவித்தவன் நாட்கணக்கில் சாப்பாடில்லாமல் இருக்க முடியும்; ஆனால் பிரார்த்தனையில்லாமல் ஒரு நிமிஷங்கூட இருக்க இயலாது. பிரார்த்தனையின்றி மன நிம்மதியில்லை!

* நம் தவறுகளுக்காக நாம் வருந்துவதற்கும், இன்றைய நிலையைவிட மோசமான, பரிசுத்தமான நிலையை அடைய விரும்புவதற்கும் சின்னமாக விளங்குகிறது பிரார்த்தனை.

* சிறு குழந்தையைவிட நான் சிறந்தவனன்று. மேதாவித்தனத்துடனும், புத்தகங்களைப் பற்றியும் நாம் பேச முயற்சி செய்யலாம். ஆனால், நாசகரமானதோர் ஆபத்து நேரும் போது நாம் சிறு குழந்தைகளைப் போலவே நடந்து கொள்ளுகிறோம். நம்முடைய மேதை நமக்கு யாதொரு திருப்தியையும் அளிப்பதில்லை.

நன்றி: குடியரசு

திருச்சிற்றம்பலம்

பாரனைத்தும் பொய்யெனவே
    பட்டினத்துப்பிள்ளையைப்போல்
ஆருந் துறங்கை
    அரிதரிது - நேரே
மனத்துறவும் அப்படியே
    டாணா இவற்றில்
உனக்கிசைந்த வாறென்றே ஓர்

காடும் கரையும்மனக்குரங்கு
    கால்விட் டோட அதன்பிறகே
ஓடும் தொழிலால் பயனுளதோ
    ஒன்றாய்ப் பலவாய் உயிர்க்குயிராய்
ஆடும் கருணைப் பரஞ்சோதி
    அருளைப் பெறுதற் கன்புநிலை
தேடும் பருவம் இதுகண்டீர்
    சேர வாரும் செகத்தீரே!

— தாயுமானார்

Space donated by

ஸ்ரீ சக்தி டெக்ஸ்டைல்ஸ்
(பிரைவேட்) லிமிடெட்

கோயமுத்தூர் ரோடு :: பொள்ளாச்சி

அமெரிக்காவில் வளரும் ஹிந்து மதம்

மகரிஷி மகேஷ் யோகியை அமெரிக்காவில் இப்போது தெரியாதவர்கள் இலர்! அவ்வளவு புகழ் அவருக்கு! தியானம் செய்து அமைதியைப் பெறவும், போதை தரும் மாத்திரைகளையும் மருந்துகளையும் சாப்பிடும் பழக்கத்தைக் கை விடவும் இவரிடம் யோசனை கேட்டுப் பயன்பெற்று வருகிறார்கள் பலர்!

இராமகிருஷ்ணபரமஹம்ஸரை அமெரிக்க மக்களுக்கு மிகவும் பிடித்திருக்கிறது. 'கடவுள் இல்லை என்று சொல்லமுடியாது. கடவுள் இருக்கிறார். பகலில் நம் கண்களுக்கு நட்சத்திரங்கள் தெரியாததால் நட்சத்திரங்கள் இல்லை என்று சொல்லிவிட முடியுமா' என்ற இராமகிருஷ்ணபரமஹம்ஸரின் தத்துவத்தை இப்போது அமெரிக்க மக்கள் பேசி வருகிறார்கள்!

விவேகானந்தர் அமெரிக்க மக்களை அந்த நாட்களிலேயே மிகவும் கவர்ந்துவிட்டார். இராமகிருஷ்ணரின் சிஷ்யரான இவர் தான் அமெரிக்கா முழுவதும் ஹிந்துமதத்தைப் பரப்பினார். 1930 ல் தெற்குக் கலிபோர்னியாவில் சில நாட்கள் இவர் தங்கி இருந்தார். இந்த இடத்தில் வேதாந்த நிலையம் ஒன்று தோன்றி இன்றும் இயங்கி வருகிறது! இந்த நிலையம் ஹாலிவுட்டில் இருக்கிறது!



பரமஹம்ஸா யோகானந்தா என்னும் யோகி வங்காளத்திலிருந்து 1925 ல் அமெரிக்காவுக்குச் சென்றபோது, ஏகப்பட்ட அற நிலையங்களை அமெரிக்கா முழுவதும் ஸ்தாபித்தார். யோகானந்தா 1952 ல் இயற்கையை எய்தினார். ஆனால் இவர் கொள்கைகளை வெள்ளைப் பெண் ஒருவர் இப்போது பரப்பி வருகிறார். இவர் பெயர் தயாமாதா!

ஹிந்துமதக் கொள்கைகள் அமெரிக்காவில் மிக வேகமாகப் பரவி வருகிறது. ஹிந்துமதக் கொள்கைகளைக் கடைப்பிடித்தால்வாழ்க்கையில் அமைதியைப் பெற முடியும் என்று அமெரிக்க மக்கள்இப்போது நம்புகிறார்கள். இதனால் ஹிந்துமத நிலையங்கள் ஏகப்பட்டவை தோன்றுகின்றன. இந்த ஹிந்துமத நிலையங்கள் யாரையும் மதம்மாற்றுவதில்லை. தியானம் செய்வது எப்படி, கெட்ட பழக்கங்களைப் போக்குவது எப்படி, கடவுளைக் காண்பது எப்படி என்று எளிய முறையில் சொல்லித் தருகின்றன.


அனைவருக்கும்
ஆனந்தம் அளிப்பது
காளி
மார்க்
ஸ்டுடியோ 'செட்'டில்
அனைவரையும்
ஆட்டிவைக்கும்
டைரக்டரையும்
ஆட்கொள்வது
காளிமார்க் பானம்.
ஆயிரக்கணக்கானவர்கள்
காளிமார்க்கின் குளிர்ந்த
புதுமை மாருத. ருசியை
அனுபவிகசின்றனர்
நீங்களும் உங்கள் தாகம்
தணிய காளிமார்க
பானங்கள் அருந்துங்கள்.
காளி மார்க்
Kali mark
50 ஆண்டுகளாகப் புகழ் பெற்றவை. எங்கும் கிடைக்கும்.



பாட்டுக்கு ஒரு புலவன்

பாரதியாரை ஒவ்வொரு கோணத்திலும் ஒவ்வொருவர் பார்க்கிறார்கள். தனக்கென்று வைத்துக்கொண்டுள்ள வர்ணக் கண்களோடு அவர்கள் பாரதியாரைப் பார்க்கிறார்கள். இதனால் பொய்யான பாரதியாரே அவர்கள் கண்களுக்குத் தெரிகிறார். திரு. நா. மகாலிங்கம் அவர்கள், விருப்பு வெறுப்பு இல்லாமல், பொது நோக்கோடு, பெரு நோக்கோடு பாரதியாரைப் பார்க்கிறார். இதனால் மெய்யான பாரதியார் இங்கே தெரிகிறார்!

திரு. நா. மகாலிங்கம் பி. எஸ்ஸி., எம். ஐ. இ.

''பாட்டுக்கொரு புலவன் பாரதியடா'' என்ற முழக்கம் எங்கும் கேட்கப்படுகிறது. மேலும், தமிழ் நாட்டிலே பாரதி விழாக்கள் மிகுந்து வருகின்றன. இதுபாரதியாரிடம் மக்கள் வைத்துள்ள மதிப்பைக் காட்டுகிறது.

பாரதி இன்று தமிழகத்தின் கவி மட்டுமல்ல. பாரத நாட்டின் தேசீயக்கவி. தேசீயக்கவி என்றால் தேசம் முழுதும் அறிந்த கவி என்றமுறையில் கூறுகிறேன். இந்திய நாடு முழுதும் ஆங்காங்கே குடியேறியுள்ள தமிழர்கள் பாரதிக்கு விழாக் கொண்டாடி அவர் பெருமையைப் பரப்பி வருகிறார்கள். இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றை அறிந்த இந்தியன் எவனும் பாரதியின் பாட்டு, அவர் உள்ளத்தில் பொங்கி வழிந்த தேசீய உணர்ச்சி என்று அறிவான். ஆகவே, பாரதியை இந்தியர் எல்லோருமே இந்தியாவின் தேசீய கவிஞர் என்று அறிந்திருக்கிறார்கள்; மகிழ்ந்து போற்றி வருகிறார்கள். ஆகவே பாரதியைத் தமிழராகிய நாம் கொண்டாடுவதில் வியப்பில்லை.

ஆனால் ஒவ்வோர் ஆண்டும் இப்படி ஒரு சடங்குபோல் கொண்டாடிவிட்டுத் திருப்தி அடைவது போதாது. பாரதி நூல்களை அவருடைய வாழ்க்கை வரலாற்றோடு ஒப்பிட்டு இன்றைய நாட்டு நிலவரங்களுக்கு

வழிகாட்டும் முறையில் பயன் படுத்திக் கொள்வது எப்படி என்று ஆராய வேண்டும். இதற்குப் பாரதியை உள்ளவாறு மதிப்பிடுவது அவசியம்.

நமது நாடு விடுதலை அடைந்து 18 ஆண்டுகள் ஆகிவிட்டன. தொழில் துறையிலும் பொருளாதாரத் துறையிலும் நாடு முன்னேறி வருகிறது. பாரதி கண்ட கனவுகள் பல நனவாகி வருகின்றன. மக்களுடைய எண்ணத்திலும் பழக்க வழக்கங்களிலும் தக்க மாறுதல்கள் வேகமாக ஏற்பட்டு வருகின்றன. இந்த வேகத்தில் நமது பழைய பண்பாடுகள் சிலவற்றை மறந்து விடக்கூடிய நிலைமை கூடச் சில துறைகளில் ஏற்பட்டு வருகிறது. இந்தச் சந்தர்ப்பத்தில் பாரதி நமக்குக் காட்டக் கூடிய வழி என்ன என்பதை ஆராயவேண்டியது மிகவும் அவசியமாகும்.

ஒரு கவிஞனையோ அவனது நூல்களையோ மதிப்பிடுவது என்றால், அவன் கூறும் கருத்துக்கள் எல்லாவற்றையுமே ஆராய்ச்சிக்கு எடுத்துக்கொள்ள வேண்டும். நமக்கு விருப்பமானவற்றை மட்டும் வைத்துக்கொண்டு பிடிக்காததை விட்டு விடக் கூடாது. பின்பற்று வதற்காயின் இக்கொள்கை தேவையாக இருக்கலாம். ஆனால்,ஆராய்ச்சிக்கு இப்போக்குத் தவறானது. பாரதி என்ன கூறுகிறார் என்று முதலில் திண்ணமாக அறிந்து கொள்ள வேண்டும். அப்போது தான் பாரதியின் கருத்துக்களை உள்ளது உள்ளவாறு மதிப்பிட முடியும். மதிப்பீட்டில் குறை இல்லாமல் இருந்தால்தான் பின்பற்றும் போதுநமது சொந்தக் கருத்தைத் தீர்மானிப்பதில் ஒரு முடிவு ஏற்படும். உதாரணமாக, ஒரு விமரிசகர்—''ஷெல்லி பிரெஞ்சுப் புரட்சியின் குழந்தை, பாரதி ருஷ்யப் புரட்சியின் குழந்தை'' என்று கூறுகிறார்.

இது சரிதானா? சரி என்று அப்படியே ஏற்றுக் கொள்வது கூடாது.

இந்தியாவில் தொடர்ந்து ஏற்பட்டு வந்துள்ளமறுமலர்ச்சியை-புரட்சியை இது மறுப்பதுபோல் இருக்கிறது. ருஷ்யப் புரட்சி பாரதியின் உள்ளத்திற்கு ஒரு தூண்டுகோல் என்பதில் சந்தேகம் இல்லை. ருஷ்யப் புரட்சியைப் போலவே இத்தாலி, பெல்ஜியம் முதலிய நாட்டு நிகழ்ச்சிகளும், நமது நாட்டில் லாலாலஜபதி ராய், தாதாபாய் நவுரோஜி முதலிய தலைவர்களும்—இன்னும் சொல்லப் போனால்—300ஆண்டுகளுக்கு முன்னால் இந்துஸ்தானத்திற்கு விழிப்பூட்டிய சிவாஜி கூடப் பாரதியின் புரட்சிக்கு வித்திட்டிருப்பதைக் காணலாம். வேத காலம் முதல் விடுதலைப் போராட்ட காலம் வரை பாரதப் பண்பாட்டின் தொடர்ச்சிக்கும் மறுமலர்ச்சிக்கும் புதிய கருத்துக்களின் எழுச்சிக்கும் காட்சிக்கூடமாக விளங்குபவர் பாரதி.

இன்னும் சிலர், பாரதியை ஒரு சமூக சீர்திருத்தக்கவி என்று மட்டுமே நினைக்கிறார்கள்; பேசி வருகிறார்கள். பாரதி ஒரு சீர்திருத்தக் கவிஞர்தான். ஆனால் பாரதியின் சீர்திருத்தங்களும் இவர்கள் நினைக்கும் சீர்திருத்தங்களும் ஒன்றுதானா? இவர்களில் பலர்—குறிப்பாக இளைஞர்கள்—பாரதியின் தேவபாணியைத் தெய்வப் பாடல்களைக் கணக்கில் எடுத்துக் கொள்வதே இல்லை. அப்படியே எடுத்துக் கொண்டாலும், சமயத்துறையில் மூட நம்பிக்கைகளைச் சாடினார், புரட்சி செய்தார் என்று எடுத்துக் காட்டுவதோடு நின்று விடுகிறார்கள்.

''பார்க்கும் இடமெல்லாம் நந்த லாலா, நின்றன் பச்சை நிறம் தோன்றுதையே நந்தலாலா'' என்று எங்கும் எதிலும் தெய்வத் தைக் காண வேண்டிய அவசியத் தைப் பாரதி வற்புறுத்தியதை உணர்ந்து மக்களுக்கு வற்புறுத் தும் சீர்திருத்தவாதிகள் எத்தனை பேர்?

தொடக்கத்தில் பாரதியை ஒரு தேசியக்கவி என்றே பலரும் அறிந்திருந்தார்கள். அதாவது தேச விடுதலைக்குப் போராடிய ஒரு கவிஞன் என்றே எண்ணி னார்கள். இன்று இப்படி எண்ணு வோர் மிகக் குறைவு. பாரதி ஒரு தேசியக் கவிஞர் என்பதில் நமக்கு மிகவும் பெருமைதான். ஆனால் பாரதி காட்டிய தேசியத்திற்கு ஆழ்ந்த பொருள் உண்டு. பாரத நாட்டின் பண்பாட்டினை, புதிய நோக்கில், புரட்சிகரமான துறை யில், மக்கள் முன் வைத்துச் சுதேசாபிமானத்தை ஊட்டிய தேசியம் பாரதியினுடையது. அவருடைய பாடல்கள் வெறும் விடுதலைப் போராட்டப் பாடல் அல்ல. இதை நாம் நன்றாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

அடுத்ததாக, மொழித்துறை யை நாம்எடுத்துக் கொள்வோம். நம் தாய்மொழியாகிய தமிழைச் சிறப்பித்துப் போற்றியவர் பார தியை விட வேறொருவர் தமிழ்க் கவி வரலாற்றிலேயே இல்லை.

> ''யாமறிந்த மொழிகளிலே
> தமிழ்மொழிபோல் இனிதா
> வதெங்கும் காணோம்
>
> யாமறிந்த புலவரிலே கம்ப
> னைப்போல் வள்ளுவர்போல்
> இளங்கோவைப்போல் பூமி
> தனில் யாங்கணுமே கண்ட
> தில்லை''

என்று பாடியவர்பாரதி. ஆனால், பாரதியின் தாய் மொழிப்பற்று, பிற மொழிகளின் மேல் வெறுப் பூட்டுவதாக எங்குமே காண முடியாது. ''வேதம் என்றும் வாழ்க என்று கொட்டு முரசே'' என்று முரசு கொட்டியவர் பாரதி. கீதை, பதஞ்சலி யோக சூத்திரம், வேதரிஷிகளின்கவிதை முதலியவற்றை மொழி பெயர்த் துத் தந்து தமிழர்க்குத் தம் முன் னோர் பெருமையை உணரத் தூண்டியவர் பாரதி. காளி தாசன் என்று புனைப் பெயர் சூடிக் கவி பாடியவர் பாரதி. ஷெல்லிக்குப் பாராட்டுக் கூட் டம் நடத்தியவர் பாரதி. வட மொழி, ஆங்கிலம், தெலுங்கு, இந்துஸ்தானி, பிரெஞ்சு மொழி களைக் கற்றுப் போற்றியவர் பாரதி. இவற்றை நன்றாகச் சிந் தித்துப் பார்த்தால், பிறமொழி வெறுப்பும், பிற மாநிலங்கள் மீது வெறுப்பும், பாரதி மேற் கொண்ட வழிக்கு அடியோடு மாறானவை என்பது தெளிவாம்.

மேலும், பாரதியின் தேசியப் பாடல்களும், அவரது தேசிய உணர்ச்சியும் இன்றுள்ள சூழ் நிலைக்கு மிக மிக இன்றியமையா தவை. இன்று தமிழ் நாட்டிலும், ஏனை மாநிலங்களிலும் மக்களி டையில் மாநில உணர்ச்சியே நாட்டுப் பற்றாக வளர்ந்து வரு கிறது. இது நாட்டின் வளர்ச் சிக்கு மிகவும் கேடுசெய்வதாகும். இதனைச் சமீபகால நிகழ்ச்சிகள் தெளிவாக்கி வருகின்றன. இத னால் இன்னும் தேசியப் பாடல் கள் ஆங்காங்குத் தோன்றிப் பரவ வேண்டிய தேவை ஏற் பட்டிருக்கிறது.

இன்று நமது நாட்டின் மொழிப் பிரச்சினையைப் பாரதி யின் தேசியக் கண் கொண்டு பார்க்க வேண்டும். பாரதி விரும்பியபடியே பள்ளத்தில் விழுந்திருக்கும் குருடர் எல்லாம் விழி பெற்றுப் பதவி கொள்ளு

மாறு தமிழை இன்று நமது மாநில ஆட்சிமொழி ஆக்கியிருக்கிறோம். இணைப்பு மொழியான பொதுமொழியைப் பற்றித்தான் சிக்கல் ஏற்பட்டிருக்கிறது. இப் பிரச்சினையை அணுகும் முறையில் தேசியக் கண்ணோட்டம் மிக மிகத் தேவை. உதாரணமாக இந்தி உடனடியாகப் பொது மொழியாக வரக்கூடாதுஎன்றோ இந்தியைவிட ஆங்கிலமே பயனுள்ளது என்றோகூறுவது வேறு, இந்தியையோ வேறு மொழியையோ பலவாறு பழித்து வேண்டாம் என்று புறக்கணித்து ஒதுக்குவது வன்முறை. பகைப்பது என்பது பாரதி வழிக்குப் புறம்பானது; ''பகைவனுக்கருள் வாய்'' என்று பாடியவர் பாரதி. தேசியப்பற்றுப் பாரதிக்கு உயிர்.

இதனால்தான் பாரதி வரலாற்றையும், நூல்களையும் தகுந்த முறையில் ஒப்பிட்டு ஆராய வேண்டும் என்று கூறுகிறேன். சிறிது கூர்ந்து கவனித்தோமாயின் பாரதியின் புரட்சியில் கவிதைப் போக்கில் அடிப்படையாக ஒரு தத்துவம் ஊடுருவிச் செல்வது தெரிகிறது. இந்தத் தத்துவமே இன்று நமது நாட்டை இமயம் முதல் குமரி வரை ஒன்றாக இணைத்து வந்திருக்கிறது. அதன் பலத்திலேயே நமது சமுதாயம் தலைமுறை தலைமுறையாக எத்தனையோ தாக்குதல்களுக்கும், அயல் பண்பாடுகளின் செல்வாக்குக்கும் ஈடுகொடுத்துக் கொண்டு அவற்றால்இடிந்து விழாமல் தொடர்ந்து நிலைத்து வந்திருக்கிறது. இந்தத் தத்துவமே உலகம் முழுவதும் அழிவுப் பாதையிலிருந்து விலகி உய்வதற்கு வழி காட்டியாகவும் அமைந்திருக்கிறது. இந்தியாவிடமிருந்து உலகம் எதிர்பார்ப்பது இன்று இதனைத்தான். அந்தத் தத்துவம் யாது? அதுதான் நமது பரமார்த்திக்கப் பெரு நோக்கு, விவேகாநந்தர் எழுப்பிய புதிய இந்திய சமுதாயத்தின் குரல். அதே குரலைத்தான் கவிதையாக வடித்துத் தருகிறார் பாரதி. விவேகாநந்தரின் சிஷ்யை நிவேதிதா தேவியே பாரதிக்கு அரசியல் குருவும், ஞானசிரியையும் ஆவார். ஆங்கில ஏகாதிபத்யத்தை வெளியேற்றினாலொழிய இந்தியப் பண்பாட்டுக்கு உய்தியில்லை என்று பாரதியை அரசியல் போராட்டத்தில் குதிக்கத் தூண்டியவர் நிவேதிதா தேவியே. இந்தியாவின் பண்பாடே இந்த ஆன்மீகத் தத்துவத்திலிருந்துதான் எழுகிறது. மேனாட்டார் கருதுவதைப்போல் நமது தெய்வ நம்பிக்கை அன்றாட வாழ்வுக்குச் சம்மந்தமில்லாத தனிப்பட்ட விஷயமோ, நாம் வாழும் இந்த உலக வாழ்வுக்குச் சம்பந்தமில்லாத மறுவுலகம் பற்றிய விஷயமோ அல்ல.

''மண்ணுலக மீதினிலே எக்
காலும் அமரரைப்போல்
அழிவில்லாமல்
திண்ணமுறவாழ்ந்திடலாம்,
அதற்குரிய உபாயமிங்கு
செப்பக் கேளீர்''

என்றுதான் பாரதி நமது சமுதாயத்துக்குச் சாற்றுகள் பாடுகிறார். இப்படிப் பாடுகின்ற பாரதி, உண்ண உணவுக்கு வழியின்றிப் பட்டினிகிடந்து பாடியவர் என்பதையும்எண்ணிேனோமாயின் பாரதிக்கு இவ்வளவு தன்னம்பிக்கையும், வறுமையிலும் வற்றாத உற்சாகமும் தந்தது அவரது ஆன்மபலமே என்று உணரலாம்.

இந்து சமயத்தைப் பற்றி மட்டுமே பாடும் குறுகிய மதப்பற்று உடையவர் அல்ல பாரதி என்பதும் இங்கே நினைவு படுத்திக்

கொள்வது நல்லது. இயேசுவையும் அல்லாவையும் பாடி, விவேகானந்தர் காட்டியபடி இந்து சமயத்தின் சர்வமத சமரச நோக்கத்தைப் புலப்படுத்தியவர் பாரதி. அதே நேரத்தில் மத சம்பந்தமான மூட நம்பிக்கைகளைப் பாரதியைப் போல் தகர்த்து எறிந்தவர் வேறு யாரும் இல்லை.

இந்த அடிப்படையை அறிந்து கொண்டால்தான், ஏன் எந்தத் துறையைப் பாடினாலும் அங்கே பாரதியார் தெய்வத்தைக் காண்கின்றார் என்பது புலப்படும்.

பாரதி முரசுப்பாட்டு சமூக சீர்திருத்தக் கருத்துக்களைக் கூறுகிறது ''நெற்றி ஒற்றைக் கண்ணனோடே நிர்த்தனம் செய்தாள்—நித்த சக்தி வாழ்க என்று கொட்டு முரசே''—என்றுதான் அந்தப் பாட்டு தொடங்குகிறது. ''தெய்வம் நமக்குத் துணை பாப்பா''—என்பது பாப்பாவுக்கு உபதேசம்.

தேசியப் பாடல்களிலே இவர் தெய்வத்தைக் காண்கிறார். பாரதத் தாய் பாரதிக்குப் பராசக்தியாகவே தோன்றுகிறாள். அவரது பாஞ்சாலி சபதம் பாரத நாட்டின் எழுச்சியையும் பரமன் அருளையும் இணைத்துக் காட்டுகிறது.

கலியாண கால

விசேஷ விற்பனை



பட்டுச் சேலைகள்
சோளி பீஸ்கள்

மற்றும் நூல் சேலைகள் &
மில் ஜவுளி ரகங்களும்
கிடைக்கும்.

நல்லி டெக்ஸ்டைல்ஸ்

பாண்டி பஜார்
தி. நகர் - சென்னை-17

போன்:
442567



டாக்டர் கிங் அறிவுரைகள்

* எந்த அறப் போராட்டத்திலும் நான்குஅடிப்படைகளுண்டு. அவையாவன: (i) அநீதி உயிரோடு இருக்கின்றதா என்பதைத் தீர்மானிப்பதற்குரிய தகவல்கள் திரட்டல். (ii) பேச்சுவார்த்தைகள். (iii) தன்னைத் தூய்மைப்படுத்தல். (iv) நேரடி நடவடிக்கை.

* விடாப்பிடியாகப் பேச்சுவார்த்தை நடத்த மறுத்து வரும் ஒரு கட்சியினரை அப்படிச் செய்யும்படி நிர்ப்பந்திக்கக் கூடியதாய் ஒரு நெருக்கடியை ஏற்படுத்தி அதன் மூலம் ஆக்கபூர்வமான கொந்தளிப்பு நிலைமையைத் திணிப்பதே நேரடி இயக்கத்தின் குறிக்கோள். காது பொத்திக் கண் மூடி வன்மம் காட்டுபவர்களுக்கு அதிர்ச்சியளித்துப் பிரச்சினையை அவர்கள் முன் நிறுத்திப் பரிகாரம் அளிக்க நிர்ப்பந்திப்பதே நேரடி நடவடிக்கையின் நோக்கமாகும்.

* எமது துன்பம் நிறைந்த அனுபவத்தில் நாம்கண்ட பேருண்மை ஒன்று உண்டு. எந்த ஓர் அடக்கும் இனமும் அடக்கப்படும் இனத்திற்குத் தானாகச் சுதந்திரம் வழங்கியதில்லை. மாறாக, அடக்கப்பட்ட இனம் தனது சுதந்திரத்தை வற்புறுத்தி வாங்கிக் கொள்ள வேண்டும்.

* சாத்வீக வழிகளில் நசுக்கப்படுபவர்களின் உணர்ச்சி வேகங்கள் வெளித் தோன்ற முடியாவிட்டால், அவை நிச்சயம், பயங்கரமான வன்முறை வழிகளில் பீறிட்டுப் பாயவே செய்யும்.

* நிறவொதுக்கல் பஸ் வண்டிகளில் போக்கு வரத்துச் செய்வதில் கிடைக்கும் கடுகத்தனை சௌகரியத்துக்காக எனது மலையத்தனைய தன்மானத்தைக் காற்றில் பறக்க விடமாட்டேன்!

—நன்றி : சுதந்திரன்

வளரும் சக்திகள்



சி. சுப்பிரமணியம்

"இளமை ஒரு மாபெரும் சக்தி. எதிர் காலமே இளைஞர்களிடந்தான் இருக்கிறது. அரசாங்கத் தலைவர்கள், விஞ்ஞானிகள், என்ஜினீயர்கள், இதர தொழில் நிபுணர்கள், கல்வியாளர்கள் முதலிய அனைவரும் அவர்களிடையே இருந்துதான் தோன்ற வேண்டும்.

சுதந்திரப் போராட்டம் போன்ற உணர்ச்சி மயமான நேரங்களில் அரசியல் தலைவர்கள் தோன்றுவது வேறு. அது ஒரு வகையில் சுலபமானது, இயற்கையாகவே நடைபெறக் கூடியது என்று கூடச் சொல்லலாம். ஆனால் விஞ்ஞானிகள், என்ஜினீயர்கள் போன்றோர் அவ்விதம் தோன்ற மாட்டார்கள். அவர்களை உருவாக்க வேண்டும். அதிலும் நாம் இப்போது பற்பல துறைகளில் மேற் கொண்டுள்ள அபிவிருத்திப் பணிகளுக்குத் தேவையான பணிகளுக்குத் தேவையான முறையிலும் அளவிலும் அத்தகையவர்களைத் தோற்றுவிக்க வேண்டும்.

புதிய சூழ்நிலை

பெரிய பெரிய நிபுணர்கள் மட்டுமல்ல, சற்றுக் கீழ் நிலையில் உள்ள அதிகாரிகள், ஊழியர்கள் கூடப் புதிய தகுதியுடையவர்களாக இருக்கவேண்டும். அலுவலகங்களில் அமர்ந்து 'பைல்கள்' பார்க்கத் தெரிந்தால் மட்டும் போதாது, நாட்டில் நடைபெறுகின்ற அபிவிருத்திப் பணிகளுக்கேற்பப் புதிய சூழ் நிலையில் செயலாற்றக் கூடியவர்களாகவும் இருக்க வேண்டும்.

இத்தகைய புதிய தேவைகளை நாம் திடீரென ஒரே நாளில் பெற்றுவிட முடியாது. இன்று நாம் ஐந்தாண்டுத் திட்டம் போட்டு விட்டோம், அதற்கேற்ற நிபுணர்களும், நிர்வாக அதிகாரிகளும் வேண்டும் என்றால் உடனே கிடைத்துவிட மாட்டார்கள், கிடைக்கவில்லை. வெளிநாட்டு நிபுணர்களின் உதவியை நாடவேண்டியுள்ளது. ஆனால் இந்நிலை நீடிக்கக் கூடாது. நமக்குத் தேவையான நிபுணர்களும் மற்றவர்களும் நம் நாட்டிலேயே கிடைக்கும் நிலைமை ஏற்படவேண்டும்.

இந்த நோக்கத்துடன் இன்றைய இளைஞர்களைப் பல்வேறு

National Library
Calcutta.

துறைகளிலும் பயிற்றுவிக்கக் கல்வித்துறையில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. செய்யப்பட்டு வருகின்றன. பள்ளி, கல்லூரிப் படிப்போடுகூட வேறு பயிற்சித் திட்டங்களும்—தனித் தனி தேவைகளுக்கேற்ப மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பஞ்சாயத்து ஆட்சி

அடுத்து ஆட்சித் துறையிலும் மாற்றம் அவசியமாயிற்று. அந்நியர் ஆட்சிக் காலத்தில் நாட்டின் அமைதி—ஒழுங்கை நிலை நாட்டுவதே அரசாங்கத்தின் முக்கிய அலுவலாக இருந்தது. அதற்கேற்ப அன்றைய நிர்வாக முறையும் இருந்தது. ஆனல் இன்று மக்களுக்கு நலன் பயக்கும் திட்டங்களைச் செயல்படுத்துவதே அரசாங்கத்தின் பெரும் பணியாக இருப்பதால் அதற்கேற்ப நிர்வாக முறையைமாற்றியமைப்பது அவசியமாயிற்று. பஞ்சாயத்து ஆட்சி எனும் கிராமக் குடியரசுகளை நிறுவியிருப்பது, மேற்சொன்ன நிர்வாக முறை மாற்றங்களில் குறிப்பிடத்தக்கதாகும்.

விவசாய அபிவிருத்தி

அபிவிருத்திப் பணிகள் எதுவாயினும் அதன் அடிப்படை நோக்கம் மக்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதுதான். அவ்வாறு பார்க்கும்போது வாழ்க்கையின் அத்தியாவசியத் தேவைகளில் முக்கியமானது—முதன்மையானது உணவு. நம் நாடு விவசாய நாடுதான். என்றாலும், துரிதமாகப் பெருகிவரும் மக்கள் தொகைக்கேற்ப நம் நாட்டில் உணவு உற்பத்தி இருக்கவில்லை. பற்றாக்குறை இருந்து வருகிறது. ஆகையால் விவசாய உற்பத்தியைப் பெருக்கியாக வேண்டும். இதற்காகப் பெரும் பெரும் அணைகளைக் கட்டி, கால்வாய்களை வெட்டி, நீர்ப்பாசன வசதிகளைப் பெருக்கி வருகிறோம். என்றாலும் எதிர்பார்த்த பலன் கிடைக்கவில்லை. இதற்கு ஒரு காரணம், நம் நாட்டில் நிலங்கள் பெரும்பாலும் துண்டு துண்டாகச் சிறுசிறு அளவில் இருக்கின்றன. ஆகையால் டிராக்டர்களைக் கொண்டு உழுவது போன்ற நவீன விவசாய முறைகளைப் பயன்படுத்த முடிவதில்லை. பெரிய அளவில் நிலம் வைத்திருப்பவர்களானாலும், முறையான விவசாயத்திற்குரிய செலவுகளையெல்லாம் செய்ய வசதியில்லாத பலர் இருக்கிறார்கள். சிறுசிறு நிலங்களை ஒன்று சேர்க்கவும், விவசாயிகளுக்குத் தேவையான உதவிகளை அரசாங்கம் முறையாக வழங்கவும் தக்கதொரு ஏற்பாடு வேண்டும் என உணரப்பட்டது. அதற்குக் கூட்டுறவு முறைதான் ஏற்றது என்ற எண்ணம் ஏற்பட்டு வலுப்பெற்றும் வருகிறது. முறை எதுவாக இருப்பினும், நம் நாட்டின் செல்வ வளப் பெருக்கத்திற்கு விவசாயம் முக்கியமானதொரு ஆதார சக்தியாக விளங்குவதால் அந்தச் சக்தியை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என்பதுதான் நோக்கம்.

சினிமா

இந்த மாபெரும் சக்திகளோடு ஒப்பிடும்போது சிறியவைகளாகவும், முக்கியமில்லாதவைகளாகவும் தோன்றும் வேறு சக்திகளும் இருக்கின்றன. உதாரணமாக, சினிமா தொழிலை எடுத்துக் கொள்வோம். மேலெழுந்தவாரியாகப் பாாத்தால் அது ஒரு பொழுது போக்குச் சாதனம் என்று மட்டுமே தோன்றும். ஆனல் மக்களிடையே புதுப் புது எண்ணங்களை, கருத்துக்களை உரு

20289 dt 26.7.74

வாக்க அத்துறையை மிக நல்ல முறையில் பயன்படுத்த முடியும். அது ஒரு வளரும் சக்தியாகையால், அதில் நல்லதொரு மாற்றம் காண்பதில் தீவிரக் கவனம் செலுத்துவது அவசியமாகிறது.

பெரியது சிறியது, முக்கியமானது முக்கியமில்லாதது என்ற வேறுபாடின்றி, நாட்டின் பொருளாதாரச் சமுதாய உயர்வுக்குத் துணைபுரியக்கூடிய எல்லா சக்திகளையும் வளர்க்க வேண்டும். அந்த அடிப்படையில்தான் எல்லோருடைய எண்ணமும் செயலும் இருக்கவேண்டும்.

தீய சக்திகள்

ஆனால் நல்ல சக்திகளைவிடத் தீய சக்திகள்தாம் விரைவாக வளரும். அது இயற்கை. பலன்-மாசூல்—தரும் பயிரைவிடக் களை தான் தலைதூக்கிக் கொண்டு வரும். அது இயற்கையின் கூற்று என்று நாம் விட்டு விடுவதில்லை. பயிர் செழித்து வளரவேண்டுமானால், களைகளைப் பறித்துத்தான் ஆகவேண்டும். அதே போல் நம் நாட்டில் இன்று தலைதூக்கியுள்ள தீய சக்திகளையெல்லாம் அகற்றியாக வேண்டும். அப்பொழுதுதான் முன்னேற்றம் காணும் நமது மகத்தான பணி வெற்றி பெற முடியும்.

இந்த வகையில் நாம் சரிவரச் செயலாற்றியிருக்கிறோமா, வளர்க்க வேண்டிய சக்திகளை வளர்த்திருக்கிறோமா, இனி நாம் செய்ய வேண்டியது என்ன என்பதை ஆராய்ந்து பார்க்க வேண்டும். அவ்வாறு பார்த்தால்தான், இனி நாம் தெளிவான, சீரான பாதையில் முன்னேற முடியும்.

திருச்சிற்றம்பலம்

பொடிக்கனகத் திருமேனித் திருமணங்கற் பூரப்
பொடி மணத்தோ டகம்புறமும் புதுமணஞ்செய் யமுதே
அடிக்கனக வம்பலத்தே திருச்சிற்றம் பலத்தே
ஆடல்புரி யரசேயென் அலங்கலணிந் தருளே.

—திருஅருட்பா

மணமும் பொற்குணமும் கொண்ட பொடி

T. A. S.

ரத்தினம் பட்டணம் பொடி

தபால் பெட்டி எண், 1151, மதராஸ்-21

தாகூர் வாழ்ந்த வீடு



கல்கத்தாவில் எங்கும் மக்கள் தொகை மிக அதிகம். இந்த நகரில் மிக நெருக்கமான ஓர் இடம் ஜோரஸன்கோ என்பது. பதினேழாம் நூற்றூண்டில் கல்கத்தா நகர் ஸ்தாபிக்கப்பட்ட போது இந்த இடம் ஒரு காடாக இருந்தது. இந்த இடத்தில்தான் இப்போது ரவீந்தரநாத் தாகூர் வாழ்ந்த வீடு இருக்கிறது. இந்த வீட்டின் பெயர் 'தாகூர் பாரி'

தாகூர் அவர் குடும்பத்தில் 14-வது பிள்ளையாகப் பிறந்தார்! இவருக்குப் பின் ஒரு பிள்ளை பிறந்தது. ஒரு வருஷம் கழித்து இறந்துவிட்டது. ஆகையால் குடும்பத்தில் இவர்தான் கடைசிப் பிள்ளை! செல்லப்பிள்ளை!

'மஹர்ஷிபவன்' என்னும் மூன்று மாடிக் கட்டடத்தில் தான் தாகூர் பொருட்காட்சி வைக்கப்பட்டிருக்கிறது. இந்த மியூஸியக்கட்டடம் மிகவும் பாதுகாப்பானது. எப்படிப்பட்ட பருவ நிலையாலும் இதை ஒன்றும் செய்ய முடியாது!

தாகூர் மியூஸியம் அமைந்துள்ள மஹர்ஷி பவனில் முதல் மாடியில், படிக்கட்டுக் கதவுக்குப் பக்கத்தில் உள்ள அறையில் தான் ரவீந்திரநாத் தாகூர் காலமானுர். இவர் கடைசியாகச் சொன்ன சில அரிய கருத்துக்கள் இந்த அறையில் ஆங்கிலத்திலும் வங்காளத்திலும் எழுதப்பட்டிருக்கின்றன.

இந்த மியூஸியத்தில் உள்ள தாகூரின் படங்களில், தாகூர் சாந்தி நிகேதனைவிட்டுக் கடைசியாகப் போவதைக் காட்டும் புகைப்படம் ஒன்று எல்லார் மனத்தையும் மிகவும் கவர்ந்துவிட்டது. இங்கே எப்போதும் ஒரு விளக்கு அணையாமல் எரிந்து கொண்டிருக்கிறது. இந்த விளக்கிலிருந்து வரும் ஒளி ரவீந்திரரின் உள்ளத்திலிருந்து வரும் ஒளியைப்போல் இருக்கிறதாம்!

தாகூருக்குச் சொந்தமான பொருள்களும், அவர் பயன்படுத்திய பொருள்களும் இந்த மியூஸியத்தில் வைக்கப்பட்டிருக்கின்றன!

தாகூர் வரைந்த சில அரிய படங்களும் இந்த மியூஸியத்தில் வைக்கப்பட்டிருக்கின்றன.

திருச்சிற்றம்பலம்

முத்தன்ன வெண்நகையாய்
முன்வந் தெதிரெழுந்தென்
அத்தன்ஆ னந்தன்
அமுதனென் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய்
வந்துன் கடைதிறவாய்
பத்துடையீர் ஈசன்
பழஅடியீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்மைதீர்த்
தாட்கொண்டாற் பொல்லாதோ
எத்தோநின் அன்புடைமை
எல்லோம் அறியோமோ
சித்தம் அழகியார்
பாடாரோ நம்சிவனை
சித்தனையும் வேண்டும்
எமக்கேலோர் எம்பாவாய்

— மாணிக்கவாசகப் பெருமான்

Space donated by

திி இந்தோ ஸ்விஸ் சிந்தடிக் ஜெம்
மானுபாக்சரிங் கம்பெனி லிமிடெட்,
மெயின் ரோடு, மேட்டுப்பாளையம், கோயமுத்தூர் ஜில்லா

DBA00002028 9TAM

உடலை எப்படி வேண்டுமானுலும் நாம் பழக்க முடியும். ஒரு கல் தொலைவை நான்கு நிமிடத்துக்கும் குறைவான நேரத்தில் ஓட முடியும். ஏற முடியாது என்று தோன்றும் பெரிய ராட்சஸ மரத்தின் மீது ஏற முடியும்! எப்படிப்பட்ட ஆபத்துக்களையும் சமாளிக்க முடியும்!

இதைப்போல, மனத்தையும் நாம் பக்குவப்படுத்திஞல், எப்படிப்பட்ட வேலைகளையும் செய்யலாம்! எப்படிப்பட்ட துன்பங்களையும் போக்கலாம்!

நம்மைச் சுற்றி என்ன நடக்கிறது என்று தெரிந்துகொள்ள நம் மனத்தை முதலில் பக்குவப்படுத்த வேண்டும். மற்றவர்கள் பார்க்காததை, மற்றவர்கள் கேட்காததை நம் மனம் முதலில் கண்டுபிடிக்கும்படி பயிற்சி அளிக்க வேண்டும். யாராவது வேடிக்கையாகப் பேசிஞல் முதலில் சிரிக்க வேண்டும். ஏதாவது பிரசினை தோன்றிஞல் உடனே அதைப் போக்கப் பதில் சொல்ல வேண்டும்.

பக்குவப்படுத்தப்பட்ட மனத்துக்கு நல்லது எது, கெட்டது எது என்று தெரியும். உண்மையானது எது, போலி எது என்று தெரியும். ஒருவரைப் பார்த்ததும் அவர் நல்லவரா கெட்டவரா என்று கண்டு பிடித்துவிடும். நிறங்களில் எது நன்ருக இருக்கும், எது பார்க்க சகிக்காது என்று தெரியும். இதைப் போல் நாமும் முயற்சி செய்தால் கொஞ்ச நாட்களில் மனத்தைப் பக்குவப்படுத்த முடியும்.


நாம் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் என்று எண்ணிக்கொண்டு, மனத்தைப் பக்குவப்படுத்தும் நோக்கத்துடன் எதையும் பார்க்க வேண்டும், எதையும் செய்ய வேண்டும். அப்போது நமக்கு, ஏற்கெனவே பார்க்காமல் விட்டு விட்டவை தெரியும்!

எதையும் புரிந்து கொள்ள வேண்டும். என்னவென்று புரிந்துகொள்ளவேண்டும் என்ற ஆவலை நாம் உண்டாக்கிக் கொள்ளவேண்டும். இப்படிப் பயிற்சி செய்வதால், உண்மைகள் பல விளங்கும். இந்த உண்மைகள் மனத்தில் படிந்து விடுகின்றன. இதஞல் அறிவு வளருகிறது. திறமை வருகிறது.

மனத்தைப் பக்குவப் படுத்த முடியும்!



இராமோபதேசம்



திருமுருக கிருபானந்தவாரியார்

"பரதக் கண்டத்தில் பண்டைக்காலந் தொட்டு எல்லா வகைச் சிறப்பும் பொருந்தி விளங்குவது அயோத்தி மா நகரம். அந் நகரத்தை மதுர முடைய செந்தமிழ்ப் புருவரும், வடமொழிப் புலவரும் வாயாரப் புகழ்ந்துள்ளனர். எல்லாவுலகத்தாரும் தவஞ்செய்து செல்லத்தக்கதாகிய மோக்ஷவுலகத்திலேயுள்ளவர்களுங்கூட அயோத்தியில் வந்து வசிப்பதற்கு விரும்புவார்களென்றால் அதன் பெருமையை அளக்க வல்லார் யாவர்?

செவ்விய மதுரஞ்சேர்ந்த
  நற்பொருளிற் சீரியகூரிய
    தீஞ்சொல்
வவ்விய கவிஞரனைவரும்வடநூன்
  முனிவரும் புகழ்ந்து வரம்பில்
எவ்வுலகத்தோர் யாவருந்
  தவஞ்செய் தேறுவானுதரிக்
    கின்ற
அவ்வுலகத்தோ ரிழவதற்கருத்தி
  புரிகின்ற நயோத்தி மாநகரம்.
—இராமாயணம்

இத்தகைய அயோத்திமா நகரத்தை இரவிகுல திலகராகிய இராமர் இராவண சங்காரத்திற்குப் பின், பன்னீராயிரம் ஆண்டு அறநெறி இதுவே, என்று உலகினருக்கு நடத்திக் காட்டி அரசாண்டனர். அவ்வாறு ஆட்சிபுரிந்த காலத்து, ஓர்நாள் நகர வாசிகளும், கிராம வாசிகளும் இராமரிடம் ஞானோபதேசம் பெறவேண்டுமென்று விழைந்து, இராமபிரானுடைய சபாமண்டபத்தை யடைந்து, காவலன்பால் விடைபெற்றுச் சென்று கொலு வீற்றிருக்குந் தாசரதியைத் தொழுதார்கள். அவ்வாறு பக்தியுடன் வணங்கிய மகாஜனங்களை, இராகவர்நோக்கி மனமகிழ்ந்து இன்னுரை கூறி எல்லோருமாகத் திரண்டு வந்த காரணம் யாதென வினவினர். மகாஜனங்கள் "தருமத்திற் சிறந்த தயாளுவே! விடயசுகங்களில் பற்றுடைய எங்கள் மனமானது, நிரதிசயானந்த நிமல வாழ்வில் அழுந்துமாறு மெய்ஞ்ஞானோபதேசம் புரிய வேண்டு" மென்று விண்ணப்பித்தனர்.

ஜனங்களது நல்லுரையைக் கேட்ட தசரத நந்தனர் புன்னகை புரிந்து, "சாதுமகாஜனங்களே! எப்போதும் நீங்கள் உபதேசிக்கப்படுகிறீர்கள். ஒவ்வொரு யாமத்திலும் என் தூதுவர்களைக் கொண்டு உபதேசிக்கிறேன். நீங்கள் யாவரும் இன்றிரவில் எனது தூதுவர் கூறும் வார்த்தைகளை ஞாபகத்துடன் கேட்டு நன்றாகச் சிந்தித்து, பின்னர் உங்கள் மனதில் தோன்றுவதை, நாளைக் காலை

வந்து நம்பால் தெரிவியுங்கள்'' என்றார். அவ்வண்ணமே செய்கிறோமென்று அவர்கள் இரகுநாயகரைத் தொழுது தத்தம் இருக்கைக்குச் சென்றார்கள்.

இரவு வந்தவுடனே தூதர்களின் வார்த்தைகளைக் கவனித்துக்கொண்டிருந்தார்கள். அச்சமயம் இராம தூதர்கள், இரவு பதினொன்றே கால் நாழிகைக்குத் தீவட்டிகள், ஆயுதங்கள், தடிகள் இவற்றை ஏந்திக்கொண்டு வாகனங்கள்மீதூர்ந்து யானைகள் மேல் துந்துபி முதலிய வாத்தியங்கள் முழங்க, வீதிகள் தோறுஞ் சென்று,

''நகரவாசிகளே! கிராமவாசிகளே! நீங்கள் எல்லோரும் மோகத்தால் ஏன் வீணாகத் தூங்குகிறீர்கள்? இந்த நித்திரை சரியல்ல. எப்பொழுது அனர்த்தம் விளையுமோ தெரியவில்லை. நீங்கள் அனைவரும் மனதைத் திடப்படுத்திக் கொள்ளுங்கள். இந்த அயோத்தியா பட்டணத்திற்கு ஒன்பது வாயில்கள் இருக்கின்றன. அவைகளில் ஒன்று இலகுவாயிருக்கிறது. இந்த இராமராஜ்யத்தில் பயமில்லை. ஆதலால் அந்த வாயில்களுக்குக் காவலாளிகளில்லை. தவிர, கதவுகளுக்குத் தாழ்ப்பாளுமில்லை. கருத்த நிறமுள்ள ஒரு பெரிய திருடன் தென் திசையிலிருக்கிறான் என்று கேள்வி. அவனை ஒருவரும் பார்த்ததில்லை. அவனுடைய தூதர்கள் மாறுவேடம் பூண்டு இந்நகரத்தின் கண் வந்து உலாவுகிறார்கள். அவர்களை நாங்களும் பார்த்ததில்லை. வேறு தூதனைக் கண்டால் அந்த நிமிஷத்தில் எங்கும் பேதத்தைச் செய்து கலகஞ் செய்கிறதாகக் கேள்விப்படுகிறோம். இவ்விதம் அநேக தூதர்கள் இவ்விடஞ் சஞ்சரிக்கிறார்கள்.

சவரன்
பாக்குத்தூள்

Distributed by

JOTHI INDUSTRIES
MADRAS-21

''இந்த அயோத்தியாபதியாகிய இரகுவீரர் நெடுங்காலம் வாழ்ந்திருக்கட்டும். அப்பொழுது நமக்கு யாதும் பயமில்லை. அந்த இரகுபதியினுடைய ஆற்றலை அறிந்தவன் யாவன்? ஞானகரரும், ஆத்மாராமரும், பிரபுவாகிய இரகுநாதரை இத்தூதர்களால் என் செய்ய முடியும்? பலமற்றவர்களாகிய உங்களுக்கு அத் தூதர்களிடத்தில் எப்போதும் பயமுண்டு. உங்கள் மத்தியில் எக்காலத்தும் ஒரு பெருங்காற்று வீசிக்கொண்டிருக்கிறது. அதற்குள் அகப்பட்டு நீங்கள் சுழன்று கொண்டிருக்கிறீர்கள். பலம் குறைந்த நீங்கள் இரவில் ஏன் தூங்கிவிடுகிறீர்கள்? அந்தத் தூதர்கள் உங்களைத் துன்மார்க்கர்களாக்கித் தங்கள் தலைவனாகிய திருடனை இங்கு வரவழைக்கிறார்கள். அந்தச் சமயத்தைத் தெரிந்துகொள்ள முடியவில்லை,

ஆதலால் தூங்குவது நலமன்று; நித்திரையை விட்டு எழுந்திருங்கள், எழுந்திருங்கள். இந்நகரத்தில் இரவிலும் பகலிலும் விழிப்புடனிருந்து, அருகே எப்போதும் கூர்மையான கத்தியை வைத்திருக்கவேண்டும். சரீரத்தில் அழியாத கவசங்களை அணிய வேண்டும். தைரியத்துடன் பயமில்லாமலிருக்கவேண்டும். ஜனங்களே, இந்த அயோத்தியா புரியில் எவன் எப்போதும் தூங்காமல் விழித்துக் கொண்டிருக்கிறானோ அவனுக்குத் திருடனிடம் எப்போதும் பயமில்லை, எங்களுடைய வாழ்மொழிகளை, எக்காலத்தும் மறவாதிருங்கள். ஜனங்களே ! சாவதானம்! சாவதானம்!! சாவதானம்!!!'' என்று இவ்விதம் அந்த இராம தூதர்கள் உரக்கக் கூறி, துந்தபி முதலிய மனோரம்பியமான வாத்தியங்களை முழக்கினார்கள். அவர்கள் இரவில் மூன்று முறை இப்பொன் மொழிகளைக் கூறிக் கொண்டு நகரமெங்கும் சஞ்சரித்தார்கள்.

இவ்விதமான நற்போதனையைக் கேட்ட மாந்தர்கள் யாவரும் அந்தவிஷயங்களின் பொருள்களை, கூர்த்த மதியால் ஆராய்ந்து ஞானத்தை யடைந்தார்கள். பிறகு காலையில் எல்லோரும் எழுந்து காலைக் கடன்களை முடித்துக் கொண்டு அளவு கடந்த மகிழ்ச்சியுடன் சபா மண்டப மெய்தி இராமபிரானை வணங்கி, ''ஏ சீதாபதி! தங்களுடைய தூதர்களின் சொற்களை



எப்போதும் நாங்கள் கேட்கிறோம். ஆனால் அதன் பொருள் களைவிசாரியாமலிருந்தோம். இன்றிரவு தங்கள் தூதர்களுரைத்த வைகளைத் தங்களாணைப்படி, எங்கள் அறிவைக் கொண்டு ஆராய்ந்து தெளிந்தோம். அஞ்ஞானம் அகன்றது. ஞானம் உதித்தது. ஆனந்தம் பெருகியது. இராமச் சந்திரா, இப்போது தாங்கள் உபதேசிக்க வேண்டுமென்பதில்லை'' என்று புகன்றனர்.

இவ்வாறு அவர்கள் கூறியதைக் கேட்ட இராமபிரான் புன்முறுவலுடன் ஜனங்களை நோக்கி, ''எவ்வாறு உங்களுக்கு ஞானமுண்டாயிற்று? நீங்கள் கவனத்துடன் கேட்ட விஷயங்கள் யாவை? எவ்விதம் ஆலோசனை செய்தீர்கள்? அந்த விவரத்தை முறையாகச் சொல்லுங்கள்'' என்று வினவினர்.

ஜனங்கள் ''கோதண்டபாணி! நாங்களடைந்த ஞானத்தைக் கூறுகிறோம் செவிமடுத்தருள்வீர். மோகம் என்பதே இரவு. தூக்கம் என்பதே மயக்கம். இந்த மயக்கம் சரியல்ல. அனர்த்தம் என்பது மரணம். இந்த அயோத்தியா பட்டினமே சரீரம். இதன் ஒன்பது வாயில்களே சரீரத்தின் நவத்துவாரங்கள். அத் துவாரங்களுக்கு இமைகளும் உதடுகளுமே கதவுகள். பிராணங்களென்கிற இராஜதூதர்கள் சஞ்சரிக்கிறார்கள். பரமாத்மாவே அரசன் ஜீவனும் இந்திரிய தேவதைகளும் தேகமாகிய பட்டினத்தில் வசிக்கும் ஜனங்கள். காலம் என்பது பெரிய திருடன். ஆதியாத்மிகம், ஆதிபௌதிகம், ஆதிதைவிகம், என்கிற தாபத்திரயங்கள் முதலிய தோஷங்கள்தாம் காலனுக்குச் சேவகர்கள். இவைகள் வியாதி என்கிற மாறுவேடத்தோடு தேகமாகிய பட்டினத்தில் உலாவுகின்றன. இவ்விடத்தில் சத்சங்கமென்கிற பலமற்ற ஜீவன்களுக்கு அந்நோய்களால் பயமேற்படுகின்றது. பெருங்காற்றென்பது பேராசை. மோகத்தில் விழுந்து மயக்கத்தையடைந்து பேராசையால் சுழல ஆரம்பித்தால் அந்தக் காலனுடைய தூதர்கள் தங்கள் தலைவனாகிய காலனை வரவழைக்கிறார்கள். மரணமடையும் காலம் எப்போதென்பதைத் தெரிந்துகொள்ள முடியவில்லை. ஆகையால் மயக்கத்தை யடைவது சரியல்ல.

ஞானமாகிற கத்தி வைராக்கியமாகிற முனையோடு கூடியது. சத்தியமென்பதே கவசம். உறுதியான பக்தியோடிருத்தலே தைரியம். பரமாத்மாவை யறிந்தவனே விழித்துக்கொண்டிருக்கிறவனாவான். இவைகளுள்ளவர்களுக்கு எப்போதும் பயமில்லை. ஞானத்தையடைவதுதான் சாவதானம். வாத்திய வொலிகள் அறிவை விளைவிக்கும் சாதுக்களுடைய வசனங்கள். அந்த வசனங்களை எப்போதும் அறிவைக் கொண்டு ஆராய்ந்து தெளிதல் வேண்டும். தங்கள் சந்நிதியில் வசிப்பதுதான் மோக மொழிந்த விடியற் காலம். நீர் தான் பரமாத்மா. இந்த சபைதான் வாசஞ் செய்யவேண்டிய இடம். உமது முன்னாலே நிற்கும் நாங்கள் எல்லோரும் மோக்ஷ பதவிக்கு வந்தவர்கள். இப்போது நாங்கள் தங்களைக் கேட்கவேண்டியது யாது? தாங்கள் உபதேசம் செய்ய வேண்டியதுதான் யாது? தங்கள் திருநாமத்தைச் சொன்ன மாத்திரத்தில் மனிதர்கள் மோக்ஷத்தை யடைகிறார்கள். இதில் ஐயமில்லை'' என்று கூறினார்கள்!



எல்லைக் காந்தி

எல்லைக் காந்தி என அழைக்கப்படும் அப்துல் கபார்கானுக்கு இப்போது 79 வயது ஆகிறது. இவர் பிரிட்டிஷ்காரர்கள் காலத்தில் பதினைந்து ஆண்டுகள் சிறையில் அடைக்கப்பட்டார். காரணம், சுதந்திரப் போராட்டத்தில் ஈடு பட்டதால் சுதந்திரம் வந்தபின், பாகிஸ்தானில் பதினைந்து ஆண்டுகள் சிறையில் அடைக்கப்பட்டார். இதற்குக் காரணம், பாக்டூனிஸ்டான் என்று எல்லை வாசிகளுக்காக இவர் தனி நாடு கேட்டுப் போராடியதுதான்!

நேருவுக்கு மிக வேண்டியவர் அப்துல் கபார்கான். ஆனால் கபார்கானை விடுதலை செய்ய நேருவால் எதுவும் செய்ய முடியவில்லை. எல்லைக் காந்தியைப் பாகிஸ்தான் அரசாங்கம் தொடர்ந்து பல வருஷங்கள் சிறையில் வைத்திருப்பதை எண்ணி மனம் வருந்தினார் நேரு. எதுவும் பேசவும் முடியவில்லை. நேரு ஏதாவது பேசினால், பாகிஸ்தானின் உள்நாட்டு விவகாரத்தில் நேரு தலையிடுவதாகப் பாகிஸ்தான் மற்ற நாடுகளிடம் பெரிதாகக் குறை கூறும்!

எல்லைக் காந்தியை விடுதலை செய்யவேண்டும் என்று உலகத்தில் பல பகுதிகளிலிருந்து கூக்குரல்கள் கிளம்பின. இதனால் இவர் 75 வது வயதில், 1964-ல் வருஷத் தொடக்கத்தில் விடுதலை செய்யப்பட்டார். இவருடைய உடல் நிலை மிக மோசமாகிவிட்டது. இவர் சிறையில் இறந்து விட்டால் நாட்டில் புரட்சிகள் தோன்றும் என்று பயந்தது பாகிஸ்தான் அரசாங்கம்!

இங்கிலாந்துக்குச் சிகிச்சை பெறச் சென்ற இவர் அமெரிக்காவுக்குப் போக முடியவில்லை! அமெரிக்க அரசாங்கம் இவருக்கு விசா கொடுப்பதைப்பாகிஸ்தான் தடுத்தது. ஆப்கனிஸ்தான் இவருக்கு ஆப்கானிஸ்தான் அரசு விசா அளித்துவிட்டது. அதைப் பாகிஸ்தான் தடுப்பதற்குள் தாமதமாகி விட்டது!

ஆப்கானிஸ்தானில் எல்லைக் காந்திக்கு ஏகப்பட்ட வரவேற்பு! ஏகப்பட்ட ஆதரவு! அகிம்சையில் மிக நம்பிக்கைகொண்ட இவர், நாட்டுக்காகவும் மக்களுக்காகவும் உழைப்பதுதான் முஸ்லிம் மதத்தின் முக்கிய கொள்கைகளில் ஒன்று என்கிறார்!

ஆப்கனிஸ்தான் அரசாங்கச் செலவில் ஆப்கானிஸ்தானில் இப்போது இவர் வாழ்ந்து வருகிறார்.

கவிதைத் தலைவி

வெ. பத்மநாபன் *(கல்கத்தா)*

1. கவியில் கம்பன் அமுதாக
காவிய உலகின் கனியாக
புவியில் புதுமைப் பிழம்பாக
பூத்துக் குலுங்கிட நீ வருவாய்!

2. அன்னைத் தமிழாய் நீ வருவாய்!
ஆடும் கொடிபோல் நீ வருவாய்!
என்னைத் தமிழின் தூதாக்கி
ஏற்றம் தரவே நீ வருவாய்!

3. கவிதை எழுத நான் நினைத்து
காகிதம் தனையே எடுக்கின்றேன்
புனிதப் பொருளாய் நீ வந்து
பூவிதழ் மலரச் சிரிக்கின்றாய்!

4. உள்ளம் தெளிவில் வீற்றிருக்க
ஊக்கம் பிறக்கும் வேளையிலே
கள்ளமில்லா முகத்துடனே
காட்சிப் பொருளாய்த் தெரிகின்றாய்!


5. எழுதும் ஆவல் ஓங்கி நிற்க
ஏடும் அருகில் ஏங்கி நிற்க
விழுமிய ஞான விழியுடனே
வீடு முழுதும் தெரிகின்றாய்!

6. உன்னை மறக்க நான் நினைத்து
உள்ளம் தனையே அடைக்கின்றேன்
என்னைக் கவர நீ நினைத்து
ஏடு கொண்டு தருகின்றாய்!

7. வண்ணத் தமிழின் சாரமெல்லாம்
வரிசைப் படுத்தித் தருகின்றாய்!
எண்ணம் இலக்கியம் இவையெல்லாம்
ஏட்டில் வடித்துத் தருகின்றாய்!

8 பண்ணின் வாய்மொழிப் பேச்சாலே
பாட்டின் இலக்கணம் நீ கூற
கண்ணின் வேல்விழி உனை எண்ணி
கவிதை இலக்கணம் மறக்கின்றேன்!

9. எழுத்தில் வடிக்க நினைக்கின்றேன்
ஏடாய் ராடாய் விரிகின்றாய்!
எண்ணில் எழுத முற்படுமுன்
ஏனோ எங்கோ மறைந்து விட்டாய்!



விநாயக நரஹரி பாவே

டி. டி. திருமலை

''ஞானதேவர், இராமதாசர், ஏகநாதர், நாமதேவர், துகாராம் முதலான பக்திமான்கள் அவதரித்த புண்ணிய பூமியும், சிவாஜி போன்ற மாவீரர்களும், பால கங்காதர திலகர் போன்ற தேச பக்தர்களும் வாழ்ந்த நாடுமான மகாராஷ்டிரத்திலேதான், ஆச்சார்ய விநோபா பாவேயும் தோன்றினர்.

பம்பாய் மாகாணத்தில், கொலாபா ஜில்லாவிலுள்ள பென்தாசில் பிரிவில், ககோடா என்ற கிராமத்தில் 1895-ஆம் ஆண்டு, செப்டம்பர் மாதம், 11-ஆம் தேதி விநோபா பிறந்தார். அவருடைய முழுப்பெயர் **விநாயக நரஹரி பாவே** என்பது. அவருடன் பிறந்தவர்கள் மூன்று சகோதரர்களும், ஒரு சகோதரியும் ஆவார்கள். விநோபாதான் எல்லோருக்கும் மூத்தவர். அவர் தாயார் **ருக்மிணி தேவியார்** தெய்வ பக்தி நிறைந்த உள்ளம் படைத்தவர். அவருடைய தகப்பனார் **நரஹரி பாவே** என்பவர். அவர் சாயம் தோய்க்கும் தொழிலில் நிபுணர். மகாராஜா கெய்க்வார் நடத்திவந்த பள்ளியான கலாபவனத்தில் படித்தார். 'பிரிட்டிஷ் காக்கி' என்ற பெயர் பெற்ற சாயம், இக்கலாபவனத்

விநோபா பாவேயின் தாயார் ருக்மணி தேவியார், தகப்பனார் நரஹரிபாவே, இளைய சகோதரர் பாலகோபால்பாவே, அடுத்த இளையவர் சிவாஜிபாவே, அதற்கும் அடுத்த இளையவர் தத்தே. சகோதரி சாந்தா ஆகியோர் அனைவருமே தெய்வபக்தி மிகுந்தவர்கள். திரு. டி டி. திருமலை அவர்கள் எழுதிய ஆச்சார்ய விநோபா பாவே என்ற நூலில் இதுபோல் இன்னும் விவரங்கள் பல இருக்கின்றன.

தின் கண்டுபிடிப்புத்தான். அவர் பக்கிங்ஹாம் மில்லில் வேலை பார்த்தார். தம் குழந்தைகளுக்குச் சரியானபடி கல்வி வசதியளிக்க வேண்டும் என்று எண்ணினார். அதற்காக அவ்வேலையை விட்டு விலகி, பரோடா சென்றார். பரோடாவில் அவர் சர்க்கார் காரியாலயத்தில் 'டைபிஸ்டு' குமாஸ்தாவாக அமர்ந்தார். நவீன கால வளர்ச்சி பற்றி நன்கு அறிவார், ஆகையினாலே, தொழிலியல் கல்விதான் நாட்டுக்கு நற்பயனளிக்குமெனக் கருதினார்.

விநோபாவின் இளைய சகோதரர், பால கோபால் பாவே என்பவர். மகாத்மா காந்தியடிகள் நிறுவிய இயற்கை வைத்திய சாலையை அவர் நடத்தி வருகிறார். அது பூனாவுக்கு அருகே 'உருளி கஞ்சன்' என்னும் இடத்தில் இருக்கிறது. அடுத்த இளையவர் சிவாஜி பாவே. சேவா கிராமத்துக்கு ஐந்து மைல் தூரத்திலுள்ள பவுனாரில் விநோபாவின் 'பரந்தாம்' ஆசிரமத்தை அவர் நடத்தி வருகிறார். சிவாஜி பாவே பக்தி இலக்கியங்களில் பண்டிதர்; விநோபாவின் கருத்துக்களை நன்றாக அறிந்தவர். தத்தர் என்ற சகோதரர் குழந்தைப் பருவத்திலேயே மறைந்து விட்டார்! நான்காம் உடன் பிறப்பாகிய சாந்தா என்ற சகோதரி, சில ஆண்டுகள் இல்லறம் நடத்தி இறைவனடி சேர்ந்தார். விநோபாவைப் போலவே அவருடைய இரு இளைய சகோதரர்களும் பிரமச்சாரிகள். தங்கள் வாழ்நாளை நாட்டுக்கு அர்ப்பணித்துக்கொண்ட உத்தமர்கள். தொண்டாலும், தியாகத்தாலும் அவர்கள் இன்று சிறந்து விளங்குகிறார்கள்.

ருக்மிணி தேவியாருக்குப் பிரியமான மைந்தர் விநோபாவே. அவர், தம் மைந்தரை அன்புடன் 'வின்யா' என்று அழைப்பார், அன்னாருடைய பக்தி மயமான பாடல்களும், எந்நேரமும் அவரது நாக்கில் ஒலித்துக்கொண்டிருக்கும் இறைவனுடைய தேனினும் இனிய நாமங்களும் விநோபா மனத்தைக் கவர்ந்திருந்தன. தம் மைந்தரிடமும் ருக்மிணி தேவியார் எவ்வளவு அன்பு வைத்திருந்தாரோ, அதற்கதிகமாகவே தம் அன்னையாரை நேசித்து வந்தார் விநோபா. எல்லாச் செயல்களையும் இறைவனுக்கே அர்ப்பணம் செய்து இல்லறம் நடத்தினார் ருக்மிணி தேவியார். வீட்டில் எந்தப் பண்டம் தயார் செய்தாலும், அதை அக்கம் பக்கமுள்ள வீட்டார்களுடன் பகிர்ந்தே உண்பார். அத் தின்பண்டங்களை விநியோகிக்கும் வேலையை 'வின்யா'வே செய்ய வேண்டும்.

வெளியிடுபவரும், ஆசிரியரும்: இராம. மணிமேகலை. 4, தணிகாசலம் செட்டி ரோடு, சென்னை-17. அச்சிடுபவர்: கொண்டா காசி சீதாராமன், ராமன்ஸ் பிரிண்டிங் பிரஸ் 81-பாண்டி பஜார், தியாகராயநகர், சென்னை-17.

அருள்

ஆசிரியர் : கலைச்செல்வி மணிமேக

அருட்பெருஞ்ஜோதி



தனிப்பெருங்கருணை


கோபுலு

அருள்

தமிழ் மாத முதல் நாள் வெளி வருகிறது

இந்த இதழில்

அருள்-3
கருணை-2
கார்த்திகை, கீலக

நவம்பர்
15-11-68
விலை: 30 காசு

அணு விரதம்

ஆசார்ய துளசி

''சமூகத்தின் எழுச்சி, வீழ்ச்சியின் அடையாளம் அதனுடைய நடத்தையினுலும், எண்ணங்களினுலும் ஏற்படுகிறது, மனிதன் சமூகத்தின் ஆதாரம். அவன் எவ்வளவுக் கெவ்வளவு நெறிமுறை வழுவாமலும் நல்லொழுக்கம் நிறைந்தவனுகவும் இருப்பானே, சமூகமும் அவ்வளவுக்கு மேன்மையும், செழிப்பும் நிறைந்ததாக இருக்கும். ஒழுக்க நெறியில் வளர்ச்சி பெறுவதற்கு ஆதாரமானது, ஒழுக்க நெறிபெற்ற சிந்தனைதான். இத்தகைய சிந்தனையால்தான்செயல் நெறி படுகிறது. செயல் நெறிபடுவதால் அது பற்றிய கருத்துச் செல்வாக்கைப் பெறுகிறது. இந்நிலையில் ஒழுக்க நெறிபற்றிய சிந்தனையும் செயலும் ஒன்றை மற்றொன்று வளர்த்து, மனித வாழ்வை மேன்மை பெறச் செய்கின்றன. எண்ணம், நடத்தை இவைகளின் தூய்மையின் பொருட்டு உறுதியான எண்ணமுள்ள சுய சக்தியின் வளர்ச்சி இன்றியமையாததாகும்.

விரதத்தின் சிறப்பு, அது பற்றிய உறுதியான எண்ணத்தில், அதன் சக்தியின் வளர்ச்சியில் தான் இருக்கிறது. இந்தச் சக்தி மனிதனிடத்தில் எவ்வளவு தீவிரமாக இருக்கிறதோ அவன் தன் தன் வாழ்க்கையில் அவ்வளவுக்கு நற்பயன்களைப் பெறுகின்றான். இது, பயிற்சியினுல் பெருகவும், வலுவடையவும் செய்கிறது.

அணுவிரத ஒழுக்க விதிகள் இந்தப் பயிற்சி முறையை மலரச் செய்யும் வழியாகும், 'அணு' என்பதற்குப் பொருள் 'சிறிய' அல்லது 'எளிய'; விரதத்தின் பொருள் ''உறுதி'' ''அணு விரதம்'' என்பது சிறிய அல்லது எளிய உறுதி எனப்படும்.

விரதத்தின் வளர்ச்சி பல பயிற்சி முறைகளுக்குப் பிறகு ஏற்படுகிறது. அதனுடைய தொடக்கம் அணுவிலிருந்து உண்டாகிறது.கீதையில் கூறியுள்ளது போல, 'ஸ்வல்பமப்யஸ்ய தர்மஸ்ய த்ராயதே மஹதோ பயாத்' (தர்மத்தின் சிறு பகுதியும் பேரச்சத்திலிருந்து மனிதனைக் காப்பாற்றுகிறது) மேற்கூறிய கோட்பாட்டின்படியே

நாங்கள் கூறுவது யாதெனில், விரதத்தின் சிறு தொடக்கமும் மனிதனைப் பல தீங்குகளிலிருந்து காப்பாற்றக் கூடும்.

விரதம் தனித்தனி மனிதர்களின் வாழ்க்கையில் ஓர் எல்லைக் கோடாக இருக்கிறது. இது ஒப்புக்கொண்ட உறுதியே தவிர நம்மீது வற்புறுத்திச் சுமத்தப் பட்டதன்று. கட்டுப்பாட்டின் தன்மை எல்லாவற்றிலும் ஒரு சீராக இருப்பதில்லை. இதன் காரணத்தினால் தான், நோன்புகள் பலவாகவும் அவற்றைப் பின்பற்றவேண்டிய விதிகள் பல விதமாகவும் அமைந்துள்ளன. எவனுக்கு எவ்வளவு திறமை, எவ்வளவு மன உறுதி இருக்கிறதோ, அவன் அந்த அளவுக்கு விரதத்தை மேற் கொள்ளுகிறான்.

அணுவிரதம் மனித வாழ்வியலில் சிறியதொரு நெறி முறை. இது அன்பு, நட்பு, புலனடக்கம் இவைகளினால் தன்னைத்தானே மேன்மை நிலைக்கு உயர்த்திக் கொள்ளும் நெறி வழியாகும். ஒருவனிடத்தில் எப்பொழுது புலனடக்கம் தோன்றுகிறதோ அப்பொழுதுமற்ற எல்லாக்குறைகளும் அகன்றுவிடுகின்றன. விரதங்கள் (நெறிக் கோட்பாடுகள்) பல இருக்கின்றன. நாம் அணுவிரத ஒழுக்க விதித் தொகுப்பில் சில விரதங்களைத் தேர்ந்தெடுத்துச் சேர்த்திருக்கிறோம். இவை ஒவ்வொரு சாராரும் ஒரேமாதிரியாக மேற்கொள்ள வேண்டிய முறையாகும். விரதங்கள் எளியவை தாம். இவைகளின் நோக்கமும் விளைவும் மிகச் சிறந்தவையாகவும், எங்கும் பரவத்தக்கவையாகவும் அமைந்திருக்கின்றன.

நறுமணம் கமழுவது

அசோகா

பாக்குத்தூள்

தூக்கங் கெடுத்தான் சுகங்கொடுத்தா னென்னுளத்தே
ஏக்கந் தவிர்த்தா னிருளறுத்தான்—ஆக்கமிகத்
தந்தா னெனையீன்ற தந்தையே யென்றழைக்க
வந்தா னென் னப்பன் மகிழ்ந்து. —திருவருட்பா.

எந்த
ஒரு கஷ்டத்தையும்
அருள் மயமான
மன இயல்புடன்
சரிக்கட்டினால்
இனிமை பொங்கி வழியும்!

அருள் ஒளி

முன்னாள் அமைச்சர்
கோ. பூவராகன்



மானிட இனம் இம்மைப்பயன்களையும், இன்பங்களையும், ஆதாயங்களையும் கலந்து அனுபவித்துப் போதை கொண்டு தருகித் திரியும் இயல்பு கொண்டது. உலகியல் இன்ப நுகர்ச்சிகள் புலன் இன்பங்களுக்குத் தோதாக அமைந்திருப்பதால், மெய்யின்ப நாட்டத்திலே காலம் உருண்டோடி விடுகிறது. ஆகாய வேட்கையையும் ஆதாய வேட்டையையும் மனித இனம் குறிக்கோளாகக் கவ்விக்கொண்டு அவதிப்படுவது மானிட ஜாதியின் இயல்பு. விஞ்ஞான வளர்ச்சி மானிட சமுதாயத்துக்குப் பற்பல சௌகரியங்களைப் பெருக்கித் தந்திருக்கிறது. ஆதாய வேட்டையிலே வெற்றிக் கொடி நாட்டி, பரணிபாடி கொக்கரித்துத் திரியும் மானிட இனம், மன அமைதி இல்லாமல் துடிப்பதைக் காண்கிறோம். புற வெற்றியில் நாட்டங்கொண்டு ஓரளவு வெற்றியை எட்டிப் பிடித்த மனித ஜாதியைக் கிலி உலுக்கி ஊஞ்சலாட்டி அல்லல்பட வைக்கிறது. மனித இனத்திற்குக் கிலியை விரட்டி மன அமைதியை நிலை நாட்டும் மனத்தின்மை இல்லை; மன உறுதி இல்லை; மனப் பக்குவம் இல்லை. இதற்குக் காரணம் புற வெற்றியிலே, புற ஆதாயத்திலே நாட்டம் கொண்டு, அகத்தை மறந்துவிட்டதுதான். புறத்திலே ஏற்பட்டவலிமையும், வளர்ச்சியும், அகத்திலும் ஏற்பட்டிருந்தால், எத்தகைய அவல நிலையையும் சுதாரிக்கும் மனத்தின்மை வளர்ந்து ஓங்கி நின்றிருக்கும்.

அக மலர்ச்சியின் கனிவுதான் அருள் பண்புகள். அக வலிமை இல்லாத மானிட இனம் மன அமைதி இல்லாமல் அவதிப்பட்டுக் கொண்டேயிருக்கும்; அல்லல்பட்டுச் சீரழிந்து கொண்டுதான் இருக்கும். சமயத்தை

இலக்கணப் படுத்த முயன்ற ஞானி டால்ஸ்டாய், 'சமயம் என்பது அக நெகிழ்ச்சியிலே விளைந்த அமுத ஊற்று' என்ற தோரணையிலே விளக்கம்கூறினர். மானிட இனத்திற்கு அகவலிமை வாய்க்க வேண்டுமானல், அருள் செல்வியின் அருள் கிட்ட வேண்டும். மானிட இனம் புறச் செல்வங்களைத் தேடித் தேடி நாடி நாடி அவதியுறுவதைக் காண்கிறோம். அகத்திலே அருள்செல்வியின் கனிவு கசிந்து மல்கி விட்டால், அதுவே மானிட இனத்திற்கு மிகப் பெரிய அமுதசுரபியாகும். அறிவுநெறி, அன்பு நெறி, அறநெறி, அருள் நெறி ஆகிய நெறிகளிலே மனித இனம் 'முழுமையை', 'முழு நிறைவை' எய்துவது அருள் நெறியிலேதான்! புற ஆதாய வேட்டையிலே வெற்றி கண்ட மனிதன், அரைமனிதனே! அவன் முழுமனிதனுகச் சுடர்விட வேண்டுமானல், அருள் செல்வியின் கருணை அவனுக்குக் கிட்ட வேண்டும். அருள் இல்லாத மனிதன் வெறும் நடமாடும் ஜீவராசி! அவனிடத்திலே எண்ணற்ற திரவியம் இருக்கலாம், வளமான வாழ்வு வசதிகள் இருக்கலாம், இருப்பினும், அவன் அரை மனிதனே! ஒரு மேலைநாட்டுஞானி, 'தத்துவ ஞானி யார்?' என்ற கேள்விக்கு 'இருண்ட வீட்டிலே கறுப்புப் பூனையைத் தேடுபவன் தான் தத்துவஞானி' என்று நகைச்சுவை நயத்துடன் பதிலளித்தாராம்! அருள் கனிவு இல்லாத மனிதனையும், அருள் நெறியைப் புறக்கணித்துச் செல்வம் தேடுவதிலே மட்டும் நாட்டம் கொண்ட மனிதனையும் இருண்ட வீட்டிலே கறுப்புப் பூனையைத் தேடும் மனிதனுடன் இணைத்துக் கூறலாம். அக ஒளி இல்லாமல் புற வாழ்க்கையிலே வெற்றிக் கொடியை நாட்டிவிடமுடியாது. அக ஒளியை ஏற்றி வைக்கும் நந்தா விளக்கு அருள்செல்வி தான்! அருள் செல்வி தரும் அக ஒளி மூலமாகவே 'நிறைவை' நாடிப் பேரின்பம் காணமுடியும்!

சவரன்
பாக்குத்தூள்
Distributed by
JOTHI INDUSTRIES
MADRAS-21

அரசியல்துறை, கொந்தளிப்புக்களையும், குமுறல்களையும் கொண்டது. பகமைவெறியாட்டமாடும் களம், அரசியல் களம். ஆனல் நமது காந்தியடிகள் அரசியல் துறையிலே அருள் நெறியைக் கலந்து மக்களுக்கு வழங்கினர்; அரசியல் தொண்டர்களுக்கு நன்கொடையாக அருளினர். காந்தியடிகள் அருள் சுடர். அந்த அருள் சுடரிலே பாரத நாட்டின் கோடானுகோடி மக்கள்கரைந்து உருகினர்கள். அந்த அருள் பிழம்பிலே கலந்து முக்தி நெறி பெற்ருர்கள். தேசபக்தி நெறி அடைந்தார்கள். உலகத்திற்கே வழிகாட்,

டிய ஒளிவிளக்காக, அமரஜோதி யாகத் துலங்கினார். மருள் என்னும் மாய வலையிலே அவதிப்பட்ட தமிழ் நாட்டு மக்களை விடுவிக்க முயன்ற அருள் ஜோதி வள்ளலார், அருட்பா அமுத வடிவிலே அருள் ஜோதியைத் தமிழ் மக்களுக்கு வழங்கினார். தமிழ் நெஞ்சங்கள், அருள் நெஞ்சங்களாக மாறப் பேரின்பப் பெட்டகமாக உருவாக, அருட்பாக்களை அமுத நிலவென அருளினார். அருள்பாக்கள் ஒவ்வொரு மனித இனத்தின் நெஞ்சிலும் ஊடுருவி அருள் ஒளியை ஏற்ற வேண்டும் என்பதையே நோக்கமாகக் கொண்ட அருள் தொண்டர்கள் அருள்பாக்களை நாடெங்கும் பரப்பி வருகிறார்கள்.

மனித இனத்தின் அன்றாட வாழ்க்கையிலே எத்தனையோ இடர்கள்! இன்னல்கள்! வேதனைகள்! துன்பங்கள்! இயந்திர நாகரிகத்தின் பிடியிலே, சுழற்சியிலே அகப்பட்டு அவதிப்படும், தற்கால மனிதனுக்கு அருள்நெறி, அமுதவரமாகும். அருள்நோக்கு, அருள் மனப்பான்மை, அருள் மனப்பக்குவம் நவீன கால மனிதனுக்கு ஏற்பட்டுவிட்டால், அன்றாட வாழ்விலே இனிமை பெருகும்; கனிவு பொங்கும்; தூய மகிழ்வு கொழிக்கும்; வேதனையின் பாரங்கள் குறையும். எந்த ஒரு பிரச்னையையும் அருள் நோக்குடன் அணுகினால், எளிதாகச் சுதாரிக்கலாம். எந்த ஒரு துன்பத்தையும் அருள் மனப்பான்மையுடன் சமாளித்தால் எளிதாகச் சமாளிக்கலாம். எந்த ஒரு கஷ்டத்தையும், அருள் மயமான மன இயல்புடன் சரிக்கட்டினால் இனிமை பொங்கிவழியும். தினசரி வாழ்க்கையிலே, அருள் நெறியை வழி காட்டியாகக் கடைப்பிடித்தால் சின்னஞ்சிறிய நிகழ்ச்சியிலே கூடப் பேரின்பம் காணலாம் மலையளவு துன்பம் கூடக் கரைந்தோடிப் போகும். சுடு சொல்லோ, கடுஞ்செயலோ தலை காட்டாது. மன நிறைவுடன் மிடுக்காகத் தினசரி வாழ்க்கைப் பாதையிலே பீடு நடை நடக்கலாம். நவீன நாகரிக உலகிலே அருள் நெறியை அன்றாடக் குறள் நெறியாகக் கைக்கொண்டவனே புறத்தை வென்றவன்! அவனே அக ஒளியுடன் ஆன்ம திருப்தியுடன் பேரின்ப நிழலிலே சுறுசுறுப்பாக நடமாடுகிறவன். உலகியல் தோல்விகளும், துன்பங்களும் அலை அலையாக மோதினாலும், அவன் மனத்தின்மையை அசைக்க முடியாது.

அருள் ஒளி வளர்க! வாழ்க!

புலியினிடத்தும் ஈசுவரன் இருப்பது உண்மையே. ஆனால் அக்காரணத்தைக் கொண்டு நாம் அதன் முன்பாகப் போய் நிற்கக்கூடாது. கெட்டவர்களிடத்தும் ஈசுவரன் இருப்பது உண்மை. ஆயினும் நாம் அவர்களோடு உடன் உறைவது சரியன்று.

—இராமகிருஷ்ணர்.

திருச்சிற்றம்பலம்

பொடிக்கனகத் திருமேனித் திருமணங்கற் பூரப்
பொடி மணத்தோ டகம்புறமும் புதுமணஞ்செய் யமுதே
அடிக்கனக வம்பலத்தே திருச்சிற்றம் பலத்தே
ஆடல்புரி யரசேயென் அலங்கலணிந் தருளே.

—திருஅருட்பா

மணமும் பொற்குணமும் கொண்ட பொடி

REGISTERED TRADE MARK

T. A. S.

ரத்தினம் பட்டணம் பொடி

தபால் பெட்டி எண், 1151, மதராஸ்-21

திரைப்படம் பார்ப்பதற்கு

அமைதியான இடம்
தூய்மையான சூழ்நிலை
சிறப்பான ஒலி அமைப்பு
சுகமான இருக்கைகள்

நேஷனல்

தாம்பரம்

தேவையற்ற சக்திகள்

திட்டங்கள் எல்லாம் அவசிய மில்லை. முன்னேற்றப் பணிகள் எல்லாம் எதற்கு? அவரவர் இஷ்டம்போல், பணக்காரர்கள் பெரும் பணக்காரர்களாகவும், ஏழை இன்னும் ஏழையாகவும் இருக்கட்டுமே. இதில் எல்லாம் ஏன் சர்க்கார் தலையிட வேண்டும் என்றால், இதை இன்றைய சமுதாயம் ஒப்புக் கொள்ளாது.

பிற்போக்கு சக்தி

இன்றைக்கு ஒரு சில அரசியல் கட்சிகள் பணக்காரர்களுக்கு ஏன் வரி போடுகிறீர்கள்? ஏழைகளை முன்னுக்கு கொண்டு வரும் முயற்சி எதற்கு? எல்லாம் ஆண்டவன் விட்ட வழியில் தானாகவே நடக்கும். சர்க்கார் இதில் தலையிட வேண்டிய அவசியம் இல்லை எனப் பிரச்சாரம் செய்து வருகிறார்கள். இத்தகைய பிற்போக்கு சக்திகள் தேவையா என்பதுபற்றி யோசித்து இளைஞர்கள் தான் முடிவு சொல்ல வேண்டும்.

பலாத்கார சக்தி

இது போன்று நாட்டில் வேறு ஒரு சக்தி இருக்கிறது. நம் நாட்டில் உள்ள ஏழைகள் முன்னுக்கு வர வேண்டுமானால், அது காந்தியடிகள் காட்டிய வழியில்தான் நடை பெறும், நடை பெறுவதே நல்லது என்கிறோம். ஆனால் ஒருவர்க்கொருவர் இரத்தம் சிந்திப் பலாத்காரப் புரட்சியின் மூலந்தான் நாட்டில் மாறுதல் ஏற்படுத்த முடியும் என்று ஒரு ''பலாத்கார சக்தி'' கூறுகிறது. உண்மையிலேயே, நாட்டின் முன்னேற்றத்திற்குப் பலாத்கார முறையில் புரட்சி வேண்டுமா? அல்லது காந்திய சமாதான வழியிலா? என்று யோசித்துப் பார்க்க வேண்டும்.



சி. சுப்பிரமணியம்



DIRECTOR
காளி மார்க்
அனைவருக்கும்
ஆனந்தம் அளிப்பது
காளி
மார்க்
Kali mark
ஸ்டுடியோ 'செட்'டில்
அனைவரையும்
ஆட்டிவைக்கும்
டைரக்டரையும்
ஆட்கொள்வது
காளிமார்க் பானம்.
ஆயிரக்கணக்கானவர்கள்
காளிமார்க்கின் குளிர்ந்த,
புதுமை மாறாத, ருசியை
அனுபவிக்கின்றனர்.
நீங்களும் உங்கள் தாகம்
தணிய காளிமார்க்
பானங்கள் அருந்துங்கள்.
50 ஆண்டுகளாகப் புகழ் பெற்றவை. எங்கும் கிடைக்கும்.

ஒன்று நிச்சயமாகத் தெரிகிறது. ஏழைகள் ஏழைகளாகவும், பணக்காரர்கள் பணக்காரர்களாகவுமே இருந்தால் தான் அந்தப் புரட்சி ஏற்படும் சூழ்நிலை ஏற்படுகிறது. ஆனால் சட்ட ரீதியில், திட்டங்களை வகுத்தே முன்னேற்றம் காண முடியும் என்பதைப் பல நாடுகளில் நிரூபித்திருக்கிறார்கள். ஆகவே, இளைஞர்கள் இது பற்றி முதலில் யோசித்துப் பார்க்க வேண்டும். பலாத்கார முறையில் முன்னேற்றம் காண்போமா? அல்லது காந்திஜியின் முறையில் நேருஜி காட்டிய சோஷலிச பாணி சமுதாய முறையில் முன்னேற்றம் காண்போமா என்று யோசித்து ஒரு முடிவுக்கு வர இளைஞர்கள் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

இந்த நேரத்தில், உலகில் பல்வேறு நிகழ்ச்சிகளை ஆராய்ச்சி செய்துபார்க்கும்பொழுது பலாத்கார அடிப்படையில் உண்மையான முன்னேற்றம் காண முடியாது என்பது நன்கு விளங்கும். முதலில் பலாத்காரத்தினால் பின்னேற்றந்தான் ஏற்படுகிறது. இந்தப் பின்னேற்றத்திற்குப் பிறகு பெரு முயற்சியின் மூலந்தான் முன்னேற்றம் காண முடியும் என்பதை உலக நிகழ்ச்சிகள் காட்டுகின்றன. ஆகவே, பலாத்கார சக்திகளுக்கு இடம் கொடுக்கக் கூடாது. இன்று இருக்கக் கூடிய சட்ட அடிப்படையில் திட்டம் வகுத்து மக்களின் முன்னேற்றத்திற்காகப் பாடுபட முடியும் என்பதை இளைஞர்கள் உணர வேண்டும்.

பிரிவினை சக்தி

இவையெல்லாம் ஒன்றும் அவசியம் இல்லை. நாட்டைத் துண்டாடிப் பிரித்துவிட்டால் முன்னேற்றம் ஏற்பட்டு விடும் என்றும் இன்று பிரச்சாரம் நடக்கிறது. இதைப் பற்றியும் பரிசீலனை செய்ய இளைஞர்கள் கடமைப் பட்டிருக்கிறார்கள். 1947-ல் ஒரு பிரிவினை ஏற்பட்டது. பாக்கிஸ்தான், இந்தியா என்று நாடு இரண்டாகப் பிரிக்கப்பட்டது. இதன் காரணமாக நாட்டில் பல கஷ்டங்கள் ஏற்பட்டிருக்கின்றன என்பது நமக்குத் தெளிவாக விளங்குகிறது. பிரிவினையினால் நாட்டிலுள்ள கஷ்டங்கள் தீர்வதற்குப் பதிலாக நோய்தான் அதிகமாயிற்று. அப்படியிருக்கும்பொழுது இன்னும் ஒரு பிரிவினை கோரலாமா? ஒரு பிரிவினை மருந்து வியாதியைத்தீர்க்கவில்லை என்று அறிந்த பின்பும், மீண்டும் அந்த மருந்தையே சாப்பிடலாமா என்று பகுத்தறிவை உபயோகித்துப் பார்க்க வேண்டும்.

சரித்திரம் புகட்டும் பாடம்

சுதந்திரம் கிடைத்த போது நாடு பிரிந்தது ஒரு பக்கம் இருக்கட்டும். அதற்கும் முன்பு 150 வருஷங்களுக்கு முன் நம் நாடு பல சிறு சிறு நாடுகளாகப் பிரிந்து இருந்தது. எப்படி ஆறு ஆயிரம் மைல்களுக்கு அப்பால் இருந்து வந்த அந்நியர்கள் நம்மை அடக்க முடிந்தது என்றால், ஒவ்வொரு பகுதியும் சிறு சிறு நாடுகளாக இருந்து, போட்டி, பொறாமையில் சண்டை போட்டுக் கொண்டிருந்ததால்தான் அவர்கள் நம்மை அடிமையாக்க முடிந்தது. துண்டு துண்டாக நாடு பிரிந்திருந்ததால், புதியபலமும், வளமும் ஏற்படவில்லை. சண்டையும் சச்சரவுந்தான் அதிகமாகின்றன என்பதைச் சரித்திர நிகழ்ச்சிகள் காட்டுகின்றன. சமீப காலத்தில் நடந்த நிகழ்ச்சிகளைப் பார்த்

தால் கூட, பிரிவினை என்ற மருந்து நோயைத் தீர்ப்பதற்குப் பதிலாக, பெரும் கஷ்டங்களைத் தான் உண்டாக்கியிருக்கின்றன என்பது கண்கூடாக உள்ள போது, பிரிவினை செய்தால் வியாதி தீர்ந்துவிடும். நாம் முன்னேற்றமடைந்து விடலாம் என்று சொன்னால், நாம் அறிவை உபயோகப்படுத்திப் பார்க்க வேண்டும்.

ஒரு சிலர், நாடு பிரிந்தால் இன்றைக்குநமக்குக் கதிமோக்ஷம் என்று சொல்லுகிறார்கள். இவர்கள் எந்த சரியான அடிப்படையை வைத்துச் சொல்லுகிறார்கள் என்பது தெரியவில்லை. மூன்று, நான்கு மாகாணங்கள் சேர்ந்து திராவிட நாடு வேண்டும் என்று ஒரு சக்தி சொல்கிறது. இன்னும் ஒரு சக்தி தமிழ்நாடு பிரிந்தால் போதும் என்று சொல்கிறது.

இவற்றையெல்லாம் பரிசீலனை செய்து பார்க்கும்பொழுது, பிரிவினையின் அடிப்படையில் எந்த நாடும் முன்னேற்றம் அடைந்ததில்லை என்பதை மனதில் வைத்துக்கொண்டு, ஒன்றாக இருந்தால் தான் முன்னேறுவதற்குப் போதிய சக்தியும், பலமும், வளமும் பெற முடியும் என்பதை உணர வேண்டும்.

இங்கிலாந்து, ஸ்காட்லாந்து எனப் பிரிக்க வேண்டும் என்று முன்பு சிலர் கூறினார்கள். ஆனால் அப்படி யாரும் அதனைப் பிரிக்கவில்லை. பிரிவினை செய்யாததால் தான் இன்று இங்கிலாந்து இந்த அளவுக்கு முன்னேற முடிந்தது என்பது நிதர்சனமாகத் தெரிந்தது. அவ்வாறிருக்கும்போது, பாக்கிஸ்தான் பிரிவினையால் ஏற்பட்ட கஷ்டங்களையும், சண்டை சச்சரவுகளையும் மறந்துவிட்டு, யாரோ வந்த நாட்டைப் பிரித்தால் போதும், அப்போது தான் முன்னேற முடியும் என்று சொல்லி இளைஞர்களின் மனத்தை உணர்ச்சி வசப்படுத்துகிறார்கள். ஆனால், இளைஞர்கள் தீவிரமாக ஆராய்ச்சி செய்து, அலசிப் பார்த்தால் பிரிவினையை ஒப்புக் கொள்ள முடியாது என்ற முடிவுக்குத்தான் வர முடியும்.

பாதுகாப்பும் பலமும்

நம் நாட்டின் சில பகுதிகள் சீனாவின் ஆக்ரமிப்புக்களாகியிருக்கிறது. அதற்கு என்ன பரிகாரம் என்று ஆலோசிக்கக் கூடிய கட்டத்தில் இருக்கிறோம். இந்த மாதிரி நிலைமை இருக்கும் பொழுது நாடு ஒன்றுபட்டிருந்தால் இதனைத் தவிர்க்க முடியுமா? அல்லது சிறு சிறு நாடுகளாகப் பிரிவதன் மூலம் தடுக்க முடியுமா என்றும் யோசித்துப் பார்க்க வேண்டும்.

நாம் மட்டும் பிரிந்து சிறு சிறு சக்திகளாகப் போய் விட்டால் சீனா வேண்டியதில்லை; பக்கத்திலுள்ள வேறு சக்திகள்கூட நம்மைத் தோற்கடித்துவிட முடியும். ஆகவே, நாடு ஒன்றாக இருந்து முன்னேற்றமடைய என்ன என்ன புதிய சக்திகளை ஏற்படுத்த வேண்டும் என்று பார்க்க வேண்டும்.

தமிழர் கோழைகளா ?

வடக்கே உள்ளவர்கள் நம்மை ஏமாற்றி விடுவார்கள் அல்லது நம்பேரில் ஆக்கிரமிப்பு செய்து விடுவார்கள் என்றெல்லாம் சொல்கிறார்கள். நமக்கு, தமிழ் நாட்டில் பிறந்த இளைஞர்களுக்கு அறிவும் ஆற்றலும் குறைவா?

இல்லையே? அறிவும் ஆற்றலும் குறைவாக இருந்தால் ஒரு வேளை நம்மை ஏமாற்றி விடுவார்கள் என்று நினைக்கலாம், அல்லது திறமைக் குறைவா? இதுவும் இல்லையே. மற்றவர்கள் நம்மை விட அதிகமாக திறமையுள்ளவர்களாக இருந்தால்தான் நமக்குப் பலன் கிட்டாது போய்விடலாம். நாம் கோழைகளாக இருந்தால்தான் நம்மை மற்றவர்கள் கொள்ளையடித்துக் கொண்டு போக முடியும். நாம் கோழைகளுமல்ல. தமிழர்கள் வீரத்திற்குப் பெயர் பெற்றவர்கள். நம்மிடத்தில் அறிவு, ஆற்றல், திறமை, வீரம் அனைத்தும் இருக்கின்றது. இவை எல்லாம் இருக்கும் காலத்தில், மற்றவர்கள் நம்மைச் சுரண்டி விடுவார்கள் என்று பயப்படுவோமேயானால் அதில் அர்த்தமே இல்லை.

தடைச் சக்திகள்

நாட்டிலே தற்போது பிற்போக்குச் சக்தி, பலாத்கார சக்தி, பிரிவினை சக்தி ஆகிய சக்திகளும் இயங்கி வருகின்றன. இந்த மூன்று சக்திகளும் நம்முடைய இளைஞர்களைப் பலவீனம் செய்யக்கூடிய தீய சக்திகள். இவை நமது வளர்ச்சிக்குத் தடையாக இருக்கக்கூடிய சக்திகள். இதை இளைஞர்கள் நன்றாகத் தெரிந்து கொள்ளவேண்டும். இத்தீயச் சக்திகளுக்குப் பலியாகாமல் விலகி, முன்னேற்றப் பாதையில் கட்டுப்பாடாகச் செல்ல வேண்டியது அவசியம்.

மற்றவர்களைக் குறை கூறுவதன் மூலம் முன்னேற்றமும் வளர்ச்சியும் ஏற்பட்டு விடாது. மற்றவர்களைக் குறை சொல்வதை விட்டு நம் காரியங்களை இன்னும் நன்றாக எப்படியெப்படி செய்ய வேண்டும் என்று ஆராய வேண்டும். ஆகவே, நமது திட்டத்தில் நம் நாட்டில் எந்தெந்த முறையில் முன்னேற்றம் காண முடியும் என்பதை நன்கு பரிசீலனை செய்ய வேண்டும். இத்திட்டம் எப்படிச் செயல்பட்டுப் பலன் தர வேண்டும் என்று இளைஞர்கள் முக்கியமாகச் சிந்திக்க வேண்டும்.

புதிய வாய்ப்புகள்

சுதந்திரத்திற்கு முன்பு நாட்டில் பெரும் தொழில்கள் ஏன் அமையவில்லை என்று ஆராய்ந்து அதற்குத் தடையாக இருந்ததையெல்லாம் சுதந்திரம் பெற்ற பிறகு தகர்ந்தெறிந்து பெரும் தொழில்கள் ஏற்பட வாய்ப்பு ஏற்பட்டு வருகிறது.

நம் தமிழ் நாட்டில் நிலக்கரியே இல்லை என்ற நிலைமை நீங்கி, சுதந்திரம் பெற்ற பிறகு நாடு ஒன்றாக இருந்த அடிப்படையில் நெய்வேலியில் நிலக்கரி இருக்கிறதா என்று கண்டுபிடித்து, அதை எடுக்கக் கோடிக் கணக்கில் செலவு செய்து திட்டம் நிறைவேறியும் வருகிறது. இந்த நிலக்கரியை வைத்துக் கொண்டு இரும்பு உருக்கு செய்ய முடியும். அதற்காகத் திட்டங்கள் வகுத்து முயற்சி செய்து வருகிறோம். அதைப் போலவே எண்ணெய் இருக்கிறதா என்று கண்டு பிடிக்க முற்பட்டிருக்கிறோம். ஆனால் பல பேர்களுக்கு நெய்வேலி என்றவுடனே எல்லாத் தொழில்களும் உடனே ஏற்பட்டுவிட வேண்டும் என நினைக்கிறார்கள். அதிலிருந்து நிலக்கரி எடுப்பது எவ்வளவு கஷ்டமான வேலை என்பது அங்கே போய்ப் பார்த்தால்தான் தெரி

திருச்சிற்றம்பலம்

விளக்குப் புகஇருள்
மாய்ந்தாங்(கு) ஒருவன்
தவத்தின்முன் நில்லாதாம்
பாவம் — விளக்கு நெய்
தேய்விடத்துச் சென்(று) இருள்
பாய்ந்தாங்கு நல்வினை
தீர்விடத்து நிற்குமாம் தீது

இளையான் அடக்கம்
அடக்கம், கிளைபொருள்
இல்லான் கொடையே
கொடைப்பயன் — எல்லாம்
ஒறுக்கும் மதுகை
உரனுடை யாளன்
பொறுக்கும் பொறையே பொறை

— நாலடியார்

Space donated by :

தி இந்தோ ஸ்விஸ் சிந்தடிக் ஜெம்
மானுபாக்சரிங் கம்பெனி லிமிடெட்,

மெயின் ரோடு, மேட்டுப்பாளையம், கோயமுத்தூர் ஜில்லா

யும். 250 அடிக்குக் கீழே தான் நிலக்கரி இருக்கிறது. அதில் தண்ணீர் வேறு இருக்கிறது இவைகளைப்பற்றியெல்லாம் நிபுணர்களிடம் கலந்து அதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம். இதெல்லாம் தெரியாமல் சிலர் தாமதம் ஏற்படுகிறது என்று குறை கூறுகிறார்கள்.

காவிரி நதிப் படுகையில் எண்ணெய் வளம் இருப்பதாக சர்க்கார் ஆராய்ந்து கூறியதும் உடனே எங்கே எண்ணெய் என்று கேட்கிறார்கள். எண்ணெய் இருக்கிறதா என்று தோண்டிப் பார்க்க ஒரு குழிக்கு ரூ ஒன்னறைகோடி செலவாகும். இதற்கு இயந்திரங்கள் வேண்டியிருக்கின்றன. அவை உடனடியாகக் கிடைப்பதாக இல்லை. வெளி நாடுகளிலிருந்து பெற வேண்டியிருக்கிறது. இதையெல்லாம் யோசித்து எண்ணெய் இருந்தால் தொழிற்சாலை ஏற்பாடு செய்ய வேண்டும் என்று முயற்சி செய்து வருகிறோம். எஞ்சினியரிங் தொழில்கள் பல ஏற்படுத்த வேண்டும் என்று முயற்சி செய்து வருகிறோம். அதோடு விவசாயத் துறையில் பல முன்னேற்றங்கள் காண ஏற்பாடு செய்து வருகிறோம். தொழில் கல்வி முன்னேற என்ன என்ன செய்ய வேண்டும் என்று யோசித்து அதற்கான ஏற்பாடுகள் செய்து வருகிறோம். இதையெல்லாம் இளைஞர்கள் ஆலோசனை செய்து, அவர்கள் தங்கள் கருத்துக்களைத் தெளிவாக்கிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறார்கள்.

முன்னேற்றம் எது ?

பிரிவினை அடிப்படையிலோ, பலாத்கார அடிப்படையிலோ, பிற்போக்கு மனப்பான்மையிலோ நம் முன்னேற்றம் காண முடியாது. பெயரில் முன்னேற்றக் கட்சி என்று போட்டுக் கொண்டால் மட்டும் முன்னேற்றம் ஏற்பட்டுவிடாது. ஆகவே, இன்று நாட்டின் முன்னேற்றத்திற்கு இளைஞர்கள் பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும். ஏனெனில் நாட்டின் பிற்கால வாழ்வும் தாழ்வும் அவர்களைப் பொறுத்தே உள்ளது. ஆகவே, அவர்கள் பொறுப்புடன் காரியங்களை ஏற்று நடத்தி முழுப் பலனைப் பெற வேண்டும்.

சீனாவின் எதிர்ப்பைச் சமாளிக்க தயாராகிக் கொள்ள வேண்டும் என்றால் தீர்மானங்கள் போட்டால் மட்டும் முடிந்து விடாது இரத்தக் கையெழுத்துப் போட்டால் மட்டும் முடிந்து விடாது. இரத்தக் கையெழுத்துப் போட்டு சிலர் நேருஜிக்கு அனுப்பியிருக்கிறார்கள். இது ஆவேசத்தைக் காட்டுகிறது. ஆனால் வேகம், உணர்ச்சி, ஆவேசம், ஆசையெல்லாம் பலம் கொடுத்துவிட முடியாது. உண்மையான பலம் என்ன? இன்று இயந்திர அடிப்படையில்தான் சண்டை போடலாம். எந்த அளவுக்கு இயந்திர சக்தியிருக்கிறதோ அந்த அளவுக்குத்தான் பலம் இருக்க முடியும்.

சாதிக்கும் ஆற்றல்

ஆகவே இந்த நாட்டிற்குப் பலம் வேண்டும் என்றால், திட்டங்கள் நிறைவேறுவது அவசியமாக இருக்கிறது. பெரும்

தொழில்கள் ஏற்படுவது அவசிய மாக இருக்கிறது. அதை விட்டு வெறும் ஆவேசம் கொண்டால் அந்த ஆவேசமே நம்மை அழித்து விடக்கூடியதாக இருக்கும். இளை ஞர்களின் சக்தி நல்ல வேலைக்குப் பயன்படுத்தப்பட வேண்டும். இதற்கு இளைஞர்களுடைய காரி யங்களைச் சாதிப்பதற்கான ஒழுக் கமும் கட்டுப்பாடும் அறிவும் ஆற்றலும் தேவை. ஆகவே நாட்டின் முன்னேற்றத்திற்குத் தடையாக இருக்கும் தீயசக்தி களையெல்லாம் உதறித் தள்ளி விட்டு இளைஞர்கள் முன்னேற்றப் பாதையில் கட்டுப்பாடாகச் செல்ல வேண்டும் என்று கேட் டுக் கொள்கிறேன்.

O

நான், நான், நான் என்று சிலர் எதற்கெடுத் தாலும் தங்களை நான் என்று சொல்லிக் கொண்டி ருக்கிறார்கள். விவேகானந்தர் சொல்லுகிற நான் என்பதைப் புரிந்துகொண்டவர்கள் சொல்லலாம், புரிந்து கொள்ளாதவர்கள் சொல்லக்கூடாது. 'நான் என் உடல் அல்ல, இந்த உடல் இறந்து விடும். ஆனால் இந்த உடலுக்குள்ளே இருக்கிற நான் இறக்க மாட்டேன்' என்கிறார் விவேகா னந்தர். நான் என்று தன் உடலைச் சொல்லாமல், நான் என்று தன் ஆன்மாவைச் சொல்லுகிறவர்கள் எதற்கெடுத்தாலும் நான், நான், நான் என்று தாராளமாகச் சொல்லிக் கொள்ளலாம்!

கடவுள் ஒருவர்தான், பெயர்தான்பல. பெயரிலே என்ன இருக்கிறது! உலகமெல்லாம் இருக்கின்ற தண்ணீரைச் சிலர் ஜலம் என்கிறார்கள், சிலர் வாட்டர் என்கிறார்கள், சிலர் பானி என்கிறார்கள், சிலர் நீரு என்கிறார்கள். எந்தப் பெயரால் சொன்னாலும் தண்ணீர் இல்லாமல் எவராலும் வாழ முடியாது. இதைப்போல எந்தப் பெயரிட்டு அழைத்தாலும் கடவுள் கருணை இல்லாமல் எவராலும் வாழ முடியாது. நமது உடம்பு வாழ, தண்ணீர். நமது உயிர் வாழ, கடவுள்.

உலகம் பெறுதல் வேண்டு வனே!

தவத்திரு
கிருபானந்தவாரியார்



ஞான வானத்தில் அருட்பிரகாச வள்ளலார் என்ற கருணை மேகம் தோன்றித் திருவருட்பா என்ற செந்தேன் மழை பொழிந்து உலகுயிர்களை உய்வித்தது.

•

கடும் வெயிலால் வெப்பம் உண்டாகின்றபோது மழையுண்டாகின்றது. அதுபோல் மிகுந்த அநீதிகள் பொங்கி மக்கள் தடுமாறுகின்ற காலத்திலே, ஞான வானில் கருணை முகில் தோன்றி அருள் மழை பொழிந்து, ஆவி சாவியாகா வண்ணம் உயிராகிய பயிரைக் காப்பாற்றும்.

தேன் மழை

இந்த முறையில் 19-வது நூற்றூண்டில் ஜாதி வெறி, சமய வெறி, மொழிவெறி முதலிய பற்பல வெறிகளாகிய வெப்பம் மிகுந்து, மக்கள் பூசலிட்டு நிலை குலைந்தபோது, ஞான வானத்தில் அருட்பிரகாச வள்ளலார் என்ற கருணை மேகந் தோன்றி, திருவருட்பா என்ற செழுந்தேன் மழை பொழிந்து உலகுயிர்களை உய்வித்தது,

வள்ளலார் வாட்டம்

வள்ளலார் சென்னையில் வாழ்ந்தால் தனது தவநிலை குலையும் என்று கருதிச் சிதம்பரம் வந்தார். இன்னுங் கொஞ்சம் ஒதுங்கி வாழ வேண்டும் என்று கருதி வடலூராகிய பெரு வெளியையடைந்தார். அங்கும் மக்கள் திரண்டு அப்பெருமானை இடர்ப்படுத்தினர்கள். அங்கிருந்து மேட்டுக்குப்பத்திற்குச் சென்றூர். திருவருளை நாடினூர். இறையருள் எங்கே? எங்கே? என்று

திருச்சிற்றம்பலம்

காகம் உறவு கலந்துண்ணக்
கண்டீர் அகண்டா காரசிவ
போகம் எனும்பே ரின்பவெள்ளம்
பொங்கித் ததும்பிப் பூரணமாய்
ஏக உருவாய்க் கிடக்குதையோ?
இன்புற் றிடநாம் இனிஎடுத்த
தேகம் விழுமுன் புசிப்பதற்குச்
சேர வாரும் செகத்திரே!

பெற்றவட்கே தெரியும் அந்த
வருத்தம், பிள்ளை
பெறுப்பேதை அறிவாளோ
பேரா னந்தம்
உற்றவர்க்கே கண்ணீர்கம்
பலையுண் டாகும்
உறாதவரே கல்நெஞ்சம்
உடைய ராவர்

— தாயுமானவர்

Space donated by :

ஸ்ரீ சக்தி டெக்ஸ்டைல்ஸ்
(பிரைவேட்) லிமிடெட்

கோயமுத்தூர் ரோடு :: பொள்ளாச்சி